# சாய்ந்த கோபுரம்

★

சி. பி. சிற்றரசு...

★

தமிழ் மன்றம்
தெப்பக்குளம் திருச்சிராப்பள்ளி.

மன்றம் வெளியீடு—4
முதற்பதிப்பு - நவம்பர் 1951
இரண்டாம் பதிப்பு - ஜுன் 1953

விலை ரூ. 1—0—0

உரிமையுடையது.

ரெயின்போ பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி.

# பதிப்புரை

நாட்டைவிட்டு விரட்டியடிக்கப்பட்டான், நடுங்கினானில்லை. போலீஸ் புலிகளின் பயமுறுத்தல்களுக்கிடையே, அவர் தம் கழுகுக் கண்களினூடே அகப்பட்டுத் திரிந்தான் - அஞ்சினானில்லை. ஆனால் அவன உள்ளத்தில் மட்டும் இத்தாலிய நாட்டின் இன்ப வாழ்வுத் திட்டம்—அதில் சுதந்திர ஆட்சியேற்பட்டு சுபிட்சம் தழைத்து, சுக வாழ்வு மக்கள் வாழ, ஓயாத்திட்டங்கள் வந்து கொண்டிருந்தன. சந்தர்ப்பம் கிடைத்த பொழுதெல்லாம் தன்னாலானதைச் செய்ய முயன்றான். பலன், நாட்டைவிட்டு விரட்டப்பட்டான். நாடு கடத்தப்பட்டான். நல்ல திட்டம் தந்தவனை நாடோடியாக வாழவிட்டது இத்தாலியின் அன்றைய யதேச்சாதிகாரக் கும்பல்.

வாழ வழிவகுத்துத் தருபவனை வதைத்து வாட்டுவதுதானே வக்ரபுத்தி கொண்ட கொடுங்கோலரின் ஆட்சியில் நடைபெறும். அவ்வண்ணமே இத்தாலிய சுதந்திரத்திற்குப் பாடுபட்ட மாஜினி, யதேச்சாதிகாரிகளின் கையிலே அகப்பட்டு அவஸ்தைப்பட்டான். அவன் வாழ்விலே கண்டுரைத்த வாழ்க்கை முறைகளையும், அவனது

சிக்கலும், சிதைவும் கொண்ட வாழ்க்கை வரலாற்றையும், தனக்கே உரித்தான விறுவிறுப்பு நடையிலே "சாய்ந்த கோபுரம்" மூலம் தமிழுலகிற்குத் தமிழ் மன்றத்தின் நான்காவது மணி ஓசையாக வெளியிட உதவிய தோழர் சி. பி. சிற்றரசு அவர்களுக்கு வணக்கம்.

தமிழ் மன்றம், திருச்சி. } தமிழ் மன்றத்தார்.

# சாய்ந்த கோபுரம்

(மாஜினி)

ஆகாயப் பூந்தோட்டம், தாஜ்மகால், ரோட்ஸ் நகரத் தாமரைச் சிலை, இயற்கைப்பாலம், பைராமிட் கோபுரங்கள், பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரம் சீனத்தின் பெருஞ்சுவர் என்பன போன்ற உலக அதிசயங்கள் ஏழிலே ஒன்று சாய்ந்த கோபுரம். நில நடுக்கத்தால் அடித்தளம் நிலைகுலைந்து கோபுரம் இப்படிச் சாய்ந்திருக்கின்றதோ என்று காண்போருக்கு அச்சந் தரும் அதன் அபாயக் காட்சி. இன்றோ நாளையோ என்றோ ஓர் நாள் இடிந்து விழும் அல்லது சாய்ந்து விடும், மேலும் நாளுக்கு நாள் சாய்ந்து கொண்டே வருகின்றது; ஆகவே யாரும் அதனருகில் போகவேண்டாம் என்று கூறவுந் தோன்றும் அதன் தோற்றம். மற்ற கோபுரங்களெல்லாம் செங்குத்தாய் நிற்க, இது மாத்திரமேன் இப்படிச் சாய்ந்து நிற்கிறது என்ற சந்தேகம் சிலருக்கு. ஆகவே, இது தெய்வகடாட்சம், பெரியோர்களின் வினைப்பயன், நாட்டார்கள் செய்த நாசவேலை, நகரத்தின் சாபக்கேடு, எதிரிகளின் பீரங்கித் தாக்குதல், இடியின் கோபம், இயற்கையின் சினம் என்றெல்லாம் அதன் உண்மையை அறியாத பாமர மக்களும், அயல் நாட்டாரும் பேசிக் கொண்டிருந்தனர். ஆனால், நிலத்தின் இழுக்கும் சக்தி (ஆகர்ஷண சக்தி) சாய்வாயிருப்பதால், அது உண்மை

தானு என பரிசோதிக்கப் பயன்படுத்தப்பட்ட கோபுரம் என்று தெரிந்துகொண்டிருந்தவர்கள் மிகச் சிலரே யாவர். பழைமையை விரும்பிப் படித்து அதி லேயே தம் அறிவைப் பறிகொடுத்த மக்கள், அதிசயத் தின் கோட்பாட்டைத் தெரிந்துகொள்ள அவ்வள வாகக் கவலை செலுத்தியதாகத் தெரியவில்லை. இந்த மாதிரியான மனோநிலை கொண்ட மக்கள் இந்தியாவில் மாத்திரமல்லாமல் உலகில் எங்கெல்லாம் மக்கள் வசித் தார்களோ, அங்கெல்லாம் இருக்கத்தான் செய் தார்கள்.

விஞ்ஞானம் தலைதூக்காத நேரத்தில் இவை கள் எல்லாம் அதிசயப் பொருள்களாகத் தென் பட்டதில் ஆச்சரியமில்லை. இன்றைய அதிசயங்கள் மேற்சொன்ன ஏழு அதிசயங்களை எல்லாம் வெட் கித் தலை குனியுமளவுக்குக் கேலி செய்கின்றன.

## விஞ்ஞானம்

எவ்வளவோ தொலைவில் என்ன நடக்கிறது என்பதை இருந்த இடத்திலிருந்தே பார்த்துவிடும் டெலிவிஷன்; கடலுக்குள்ளேயே சென்று எதிரிக் கப்பலைத் தாக்கும் டார்பிடோ, ஆள் இல்லாமலே குறித்த இடத்திற்குக் குறித்த நேரத்தில் போய் குண்டுகளைப் போட்டுத் திரும்பும் V. 2. விமானங்கள்; அகில உலகச் செய்தியை அப்போதைக்கப்போது கேட்க, பையில் அடக்கம் செய்யும் அளவுக்கு ரேடியோ பெட்டி; பார்த்தாலே கண் கூசும் சூரிய னைப் புகைப்படம் எடுக்க உள்ள சாதனங்கள்;

எத்தனையாயிரம் மைல் தொலைவில், எந்தத் திசையில், எந்த நேரத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது என்பதையறியச் சாதனம்; எதிரியின் கப்பலா, நம்முடைய கப்பலா என்று விரைவில் தெரிந்து கொள்ள ரேடர்; எப்போதோ பாடி, பாடியவர் இறந்துவிட்டாலும் இன்றுங் கேட்டுக் கொண்டிருப்பதற்கான கிராம போன் வசதிகள்; நீர் வீழ்ச்சியில மின்சாரம்; நிலத்தில் மின்சாரம் ஆகிய கண்டு பிடிப்புகள்; மேகத்தை, ஆட்டையும் மாட்டையும் போல் ஓட்டி, வேண்டிய இடத்தில் வேண்டிய அளவுக்கு மழைபெய்ய வைத்துக் கொள்வது; ரசாயனப் பொருள்களால் சாயம் தோய்க்காமல் செடிக்கே ஊசியின் மூலம் சாயமருந்தேற்றிக் காய்க்கும் போதே பலவித நிறத்தோடு பஞ்சைப் பயிர் செய்வது; எழுபது ஆண்டுகளுக்கு முன் கண்டு பிடித்த கடிகாரம் ஒன்று இன்னும் சாவிகொடுக்காமலே ஓடிக்கொண்டிருப்பது; இருதயத்தை மனிதன் உடலில் இருந்து தனியாக எடுத்து சிகிச்சை செய்தபிறகு மீண்டும் இருதயத்தைப் பதித்து விடுவது; போன்ற, எழுதவும் ஏடு இடந்தராத அளவுக்கு அதிசயங்கள் மலைபோல் குவிந்து விட்டன. அவற்றுள் ஒன்று நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அதிசய நிகழ்ச்சி.

## கண்காட்சி

ஆஸ்திரேலியாவின் தலை நகரம் சிட்னி. பன்னிரண்டாயிரம் மைல்களுக்கப்பால் ஆங்கிலேய தலை

நகரம் லண்டன். இடையே மூன்று மாபெரிய பயங்கரக் கடல்கள். உலகத்திலேயே மிகப் பெரிய கண்காட்சியை நடத்தும் நகரம் சிட்னி. அந்த மாபெரிய கண்காட்சிசாலையில் 1930-ல் ஒரு அதிசயம். இந்த அதிசயம் அந்த சிட்னியில் எப்போதுமே நடந்ததில்லை. பல மண்டலத்தாரை அங்கே காணலாம். பாரிஸ் மங்கையை, பிரான்ஸின் தலைவர்களை, எகிப்து நாட்டானை, இதாலியக் கவிஞனை, அமெரிக்க முதலாளியை, ஆங்கிலேய நாட்டு அரசியல் மேதையை, பொதுவுடமை நாட்டுப் புரட்சிக்காரனை, தர்க்க வாதியை, தத்துவ ஞானிகளை, மங்கோலியனை, சீன நாட்டானை, நடன மாதர்களை: சூரர்கள், சூதாடிகள், வேடிக்கைப் பார்க்க வருவோர், அதை விழாவெனக் கொண்டாடுவோர், பல நாட்கள் காண முடியாமல் கவலைப்பட்டு கருகிய மனதோடும் சுருங்கிய முகத்தோடும் காலத்தை நோக்கி நின்ற காதலர்கள், கண்காட்சி எப்போது தொடங்கும் என்று தம் துடித்த உள்ளத்தைத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கும் மணமக்கள், அந்த கண்காட்சியில் சம்பாதிப்பதை ஆண்டெல்லாம் வைத்துக் கொண்டு வாழ்ந்த வணிகர்கள் எல்லாரையும் அங்கே காணலாம்.

## சந்தை

கண்காட்சி என்றால் கோழியையும், குருவியையும் கூண்டில் அடைத்துக் காட்டுவதா அது? கோகில கானங்கள் குயிலோசை எழுப்புவதா

அங்கே? சந்தனசோப்பும் சௌரி முடியும் விற்கும் கடைகளா? கில்டு நகைகளும் சிலேட்டும் பென்சிலுமா அங்கே வியாபாரம்? தேன் குழலும் தேனீர் கடையும் முதலிடம் பெறுமா அதனுள்ளே ? ராஜா மந்திரி படமும் ரங்கல் ராட்டினமும் இருக்குமா? க்ஷவரக் கத்தி, பவர் சோடா, சூடான பிரியாணி, சுகுந்த பீடா விற்கும் கடைகளா அங்கே? ரப்பர் வளையல், ராணி மார்க் ப்ரோச், பேஸ் பவுடர், பெண்களுக்கு வேண்டிய ரிப்பன் ஆகிய அவ்வளவு சாமான்களையும் சேர்த்து வைத்து இங்கே கண்காட்சி என்கிறார்களே! குப்பைத் தொட்டியையும் குதிரை வண்டியையும் நிறுத்திக் காட்டாமல், நொள்ளைக்கண்ணன் கையில் கள்ளச் சாராயத்தை வைத்துக் காட்டாமல் அதோடு விட்டார்களே! அதுவரை மகிழ்ச்சிதான். பல கிராமங்களிலே வாரந் தவறாமல் நடக்கும் சந்தைகளையெல்லாம் ஒன்றாய்த் திரட்டி ஆண்டுக் கொருமுறை நகரத்திலே நடக்கும் இந்தப் பெரிய சந்தைக்குப் பெயர் கண்காட்சி.

## அதிசயம்

ஆனால் இதைப்போன்ற பொருள்களல்ல சிட்னி கண்காட்சியில். மக்கள் இதுவரையிலுமே பார்த்திராத பொருள்கள். ஒரு தரம் பார்த்திருப்பினும் மீண்டும் பார்க்க வேண்டுமே என்ற ஆசையைத் தூண்டும் பொருள்கள். உலக மேதைகளின் உருவச் சிலைகள். சீர்திருத்தம் பேசி, மன்னர்கள்

சீற்றத்திற்கிரையாய் சிரம் அற்று வீழ்ந்த அதிமேதை களின் வரலாறுகள், இவ்வளவு அதிசய மனிதர்கள்! இத்தனைக் கோடி அதிசயப் பொருள்களும் உலகில் உண்டா என்று பிரமித்துப் போகும் அதிசயப்பொருள் கள். உலகத்தின் பல்வேறு பகுதிகளிருந்து கொண்டு வந்து குவிக்கப்பட்ட பொருள்கள். பல்வேறு கடல் களின் நீர் மட்டத்திலிருந்து அடிவாரம் வரையுள்ள எல்லா உயிரினங்களும், அதிசயப் பொருள்களும் கொண்டு தந்து குவிக்கப்பட்டிருக்கும். விலைக்கு வாங் கும் பொருளைவிட, வேடிக்கை பார்க்கத் தகுந்த பொருள்களே அதிகமாக இடம் பெற்றிருக்குமாம். ஒரு நாள் பார்த்ததை மறுநாள் பார்க்க இயலுமா என்பதும் சந்தேகம்தான். இந்த நிலையில் அகில உலக மக்களின் ஆசையைத் தூண்டும் கண்காட்சியை நட் டும் சிட்னிக்கு 1930—வது ஆண்டு எல்லாரும் அதிசயிக் கத் தகுந்த அதிசயம் ஒன்று கிடைத்தது. மாலை நேரம் அதுவரை யாருமே பார்த்தறியாத மின்சார விளக்குகள் வரிசை வரிசையாக அமைக்கப்பட்டிருக் கின்றன. ஆனால் அவைகள் எரியவில்லை. அதுவரை அங்கே இருந்த சாதாரண விளக்குகள் அப்புறப்படுத் தப்பட்டன. இருள் நெருங்கும் நேரம். இன்னும் கொஞ்ச நேரத்தில் மின்சார விளக்குகள் எரியும் என்று அறிவிக்கின்றான் கண்காட்சியின் அமைப் பாளன். எல்லாரும் அவைகளைப் பார்த்தவண்ண மிருக்கின்றனர் இமைகொட்டாமல். சில சந்தேகப் பிராணிகள், ஏதோ இந்தக் கண்காட்சிக்காரன் நமக்குக் கண்கட்டி வித்தையைக் காட்டுகிறான், பணத்தைச் சம்பாதிக்க பக்குவமான திட்டம் தீட்டு

கிறான், நம்மை ஏமாளிகள் என்று நினைத்து ஏமாற்றப் பார்க்கிறான், கோடிக் கணக்கான மக்களைத் தன் கோமாளித் தனத்தால் குல்லாய் போட நினைக்கின்றான், எண்ணெயுமில்லை, திரியுமில்லை, எப்படி எரியும்? அப்படியே ஒவ்வொரு விளக்காக ஏற்றுவதானாலும், இங்கே மாட்டப்பட்டிருக்கும் இத்தனை லட்சம் விளக்குகளைக் கொளுத்த எத்தனை மாதங்களாகும்? ஏதோ புரளி, நாங்கள் நம்பவில்லை" என்கின்றான். "இருக்கும், இருக்கும், மக்களை ஏமாற்றி ஏமாற்றி நன்றாகப் பயிற்சி பெற்று விட்டார்கள். இதற்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும்" என்கிறான் இன்னொரு சந்தேகி. "ஊம், இப்படியே சொல்லிக் கொண்டிருந்து இருட்டானவுடன் எல்லாப் பணத்தையும் சுருட்டிக் கொண்டு எந்தப் பக்கமாகிலும் ஓடிவிடத் திட்டமிடுவான் இந்தக் கண்காட்சித் தலைவன்" என்கிறான் மற்றொரு சந்தேகத்தின் மாற்றாந்தாய் மகன். இப்படிப் பேசுகின்றனர் மக்கள். இதற்குள் இருட்டும் நெருங்கிவிட்டது. மக்களுக்குள் மனக்குழப்பம் அதிகமாய் விட்டது. கையெழுத்து மறைந்து, கைரேகை மறைந்து, எதிரில் வரும் ஆள் மறைந்து, எல்லாம் மறைந்து, தன் குழந்தைகளைப் பெற்றோர்கள் கையில் பிடித்துக்கொண்டு நடக்கும் நிலைக்குப் பயங்கர இருட்டு சிட்டி கண்காட்சியின் மேல் படையெடுத்து விட்டது. எங்கேயோ இரண்டோர் மெழுகுவத்திகளை ஏற்றிக் கொண்டிருக்கின்றனர்.

கடல் காற்று அதிகம். மெழுகுவத்திகள் எரிந்த பாடில்லை. அடிக்கடி அணைந்துவிடுகின்றன. கடலின் பேரிரைச்சலை ஒரு பக்கம். கூடியிருக்கும் மக்களோ கொஞ்ச நஞ்சமல்ல, லட்சக் கணக்காக. அவரவர்கள் தங்கியிருந்த இடங்களுக்குப் போகப் பாதை தெரிய வில்லை. ஒரே இருள்மயம். "விளக்கை ஏற்று, பித்தானை அழுத்து" என்று சொல்வதைக் கேட்டு அதன்படி செய்ய நியமிக்கப்பட்டிருந்தவன் அங்கே யில்லை. மின்சார விளக்குகள் சிட்னி கண்காட்சியில். பித்தான் பன்னிரெண்டாயிரம் மைல்களுக்கப் பாலுள்ள, லண்டனில் வீற்றிருக்கும் சிறந்த சிந்தனை யாளன் மார்க்கோனி கையில். அழுத்திவிட்டான் பித்தானை மின்சாரம் பன்னிரெண்டாயிரம் மைல் கள் பயங்கரக் கடலைத் தாண்டி ஒரு வினாடியில் ஓடிவந்து சிட்னி கண்காட்சியில் அலங்கரிக்கப் பட்டிருந்த மின்சார விளக்குகளுக்கு ஒளியூட்டியது.

## களிப்பு

வானமண்டலத்திலிருந்து சூரியனே கண்காட்சி யில் குதித்துவிட்டானோ என்று நினைக்கும் அள வுக்குப் பரபரப்பு. தரையில் ஒரு ஊசி விழுந்தாலும் எடுத்துவிடலாம். பகலை விழுங்க வந்த, இருட்டைப் போருக்கழைக்க மார்தட்டி முன்னே வந்த வெளிச் சம்போல் எங்கும் ஒரே ஒளிமயம். அந்தச் சுடர் மிக்க சரவிளக்குகளைத் தாவிப் பிடிக்கப்போகின் றனர், இளைஞர்கள் மட்டிலுமல்ல, வயோதிகர்கள்,

வனிதையர் உட்பட. ஆனல், தொடாதே! அபாயம்! என்ற எச்சரிக்கைப் பலகைகள் எங்கு பார்த்தா லும் தொங்கவிடப் பட்டிருக்கின்றன. அறியாமை யால், ஆநந்தத்தால், ஆர்வத்தால், அதிசய காந்தத் தால் இழுக்கப்பட்டு அதைத் தொட்டோர் அந்த இடத்திலேயே மறந்துவிட்டனர் உலகத்தை. இருள் ஓடி ஒளிந்தது. எங்கும் ஜோதிமயம். அதுவரை அவ்விளக்குகளை மக்கள் பார்க்கவில்லை யாகையால், அந்த ஒளிச்சுடரில் தங்கள் கண்ணொளியைப் பறிகொடுத்துவிட்டனர் சிறிது நேரம். ஒரே ஆரவாரம் அன்று தொடங்கிப் பல நாட்கள் பகலைக்காட்டிலும் இரவில் மக்கள் அதிகமாகச் சேரத் தொடங்கினர். பல வெளிநாடுகளிலிருந்து கப்பல்கள் வந்தவண்ணமிருந்தன. இந்த அதிசயத் துக்கு முன்னல், நமது கதைக்குரிய பைசா நகரச் சாய்ந்த கோபுரத்தின் அதிசயம் ஒன்றுமில்லா மலாய்விட்டது இன்று. ஆனல் அன்று, மேலும் நமது ஆராய்ச்சி அந்தச் சாய்ந்த கோபுரத்தை மையமாக வைத்து எழவில்லை. அது அதன் சரிவிலே இருக்கும் சமாதியிலடங்கிய ஒப்பற்ற வீரனைப்பற்றிய தாகும்.

## ரோம்

கிரேக்க தத்துவ ஞானி அரிஸ்டாடிலும், உலகியல் ஞானி கலிலீயோவும் உலகின் இழுக்கும் சக்தியைப் பரிசோதித்த இடம். அது ரோம் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டிய இடம். அது கிருஸ்துவ மதப் பூங்கா.

அகஸ்டஸ் சீசரின் அகண்ட சாம்ராஜ்யக் கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்த இடம் அது. ஜெகமஞ்சப் போரிட்ட ஜூலியஸ் சீசரின் அரசியல் அரியாசன மேறிய இடம் அது. சட்டத்தைத் தந்த ஜஸ்டினியன்(Justinian the law Giver) என்ற நிபுணன் சட்டங்களை உருவாக்கித் தந்த தாயகம் அது. நாது தளபதி பன்னீர்செல்வத்தைத் தாங்கிச் சென்ற விமானத்தின் பெயரான ஹனிபால் என்ற வீரன் ஆல்ப்ஸ் மலையுச்சியிலேறி எதிரிகளை விரட்டிய இடமும் அது. ஆளும்நேரம் போக மற்றநேரங்களில் துறவிபோல் வாழ்ந்த மார்க்கஸ் அரேலியஸின் மணிமகுடம் மின்னிய மண்டலமும் அது. இயேசுவின் கொள்கைகளை உலகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு உயர்ந்த விலைக்கு ஏற்றுமதி செய்துகொண்டிருந்த மொத்த வியாபாரிகள் என்ற போப்பாண்டவர்கள் வீற்றிருந்த இடம் அது. பரமபதம் வேண்டிய பக்தர்கள் முதல் பாராளு மன்னர்கள் வரை சிரம் வணங்கித் தம் சேவடி பணிய மதத்தலைவர்கள் மன்பதையின் நெஞ்சைப் பிளந்து கொண்டிருந்த கொடுமைகளுக்குக் கோரஉருவம் தந்துகொண்டிருந்த இடம் தீப்பற்றி எரியும் போது வீணையை வாசித்துகொண்டிருந்த நீரோ மன்னன் வாழ்ந்த இடம் அது. தாயை, தங்கையை, சிற்றன்னையை, செவிலித் தாயை, வேலைக்காரியை, விருந்துண்ண வந்தவரை, பஞ்சணைக்கழைத்த அட்டிலா, அக்டேவியன் போன்ற சீலமில்லா வேந்தர்கள் நடமாடிய இடம். அது சோமாலிலாந்தைத் தன் வசப்படுத்தி, மஞ்சூரியாவை மடக்கி, மஞ்சுகோவை யடக்கி கிழக்

கோடியிலே ஒரு துருப்பிடித்த ரோம ஏகாதிபத்தி யத்தை உண்டாக்க வேண்டு மென்று திட்டம் தீட்டி மூக்கறுபட்டு முடிந்துபோன முசோலினி நடமாடிய இடமும் அது. சீர்திருத்தக் கொள்கைகளைச் சொல்லி யதற்காக தூக்குத் தண்டனை யடைந்து மாண்டு போன சவனரோலா என்ற பகுத்தறிவுவாதி வாழ்ந்த பார் அது. கேவோர், கரிபால்டி போன்ற அரசியல் புரட் சிக்காரர்களும், மகாகவி தாந்தே போன்றவர்களும் வாழ்ந்து வீழ்ந்த சரித்திரப் புகழ் பெற்ற இத்தாலி நாட்டில் உள்ள அந்தப் பைசா நகரச் சாய்ந்த கோபு ரச் சரிவிலே ஓர் சமாதி.

## எடுத்துக்காட்டு

அது, புதுயுகங்காண விரும்புவோருக்கு ஓர் படிப்பினை. எடுத்துக்கொண்ட வினையில் எள்ளள வும் பின்வாங்காதவர்களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டு. மனிதனுடைய பண்பு, உழைப்பு, இயற்கை யாக அமைந்துள்ள ஆற்றல் ஆகிய இவைகளே வெற்றிக்கு வழிகோலுவன. எதைச் செய்தாலும் அதில் உள்ளத்தைப் பதியவைத்து உறுதியோடு செய்யவேண்டும். எடுத்துக்கொண்ட வேலை எவ்வளவு சிறிதாக இருந்தாலும் அதனை உண்மையோடு செய்யவேண்டும் என்று உறுதியில் தளராதிருப்பவர் களுக்கு அந்தச் சமாதி ஓர் எடுத்துக்காட்டு. "மனித னுக்கு வரும் நோய்களில் எல்லாம் மிகக் கொடிய மோசமான நோய்பயம் என்பதே" என்ற அறிஞர் கள் முதுமொழிக்கு இலக்காக அமைந்திருப்பது அந்தச் சமாதி.

"ஒருவன் எப்போதும் வீரனாகவே வாழ முடியாது. ஆனால் என்றென்றும் மனிதனாக வாழ முடியும்" என்ற கதேயின் அறவுரைக்கு ஓர் எடுத்துக்காட்டு அந்தச் சமாதியில் சலனமற்ற தூக்கத்திலாழ்ந்திருக்கும் வீரன் மாஜினியின் வாழ்க்கையில் ஏற்ற சோகமிக்க சம்பவங்கள்.

அந்தச் சமாதியைக் காணும்போது ஆத்திரப்படுவோர்கள் பழமை விரும்பிகள். அடக்க முடியாத வேதனையால் உள்ளங் குமுறி கண்களிலே நீர்க் கொப்பளிக்க நிற்பர் புதுயுகங் கான விரும்புவோர். மன்னன் சீற்றத்துக்கஞ்சாது எண்ணிய எண்ணத்தைப் பல எதிர்ப்புகளுக்கிடையே காட்டித் தன் கருத்தை நிலைநாட்டிய கர்மவீரன் இவன் தான் என்பர் மறுமலர்ச்சி விரும்புவோர். உயிரின் உயர்வறிந்தும் உள்ளத்தை உள்ளவாறே உணர்த்திய உத்தமன் இவன்தான் என்பர் நேர்மையில் நாட்டங் கொண்டோர்.

## தோன்றினான்

1805-ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ந் தேதி ஜினோவா என்ற இடத்தில் பிறந்தான் மாஜினி. அன்று, இவன் இதாலியின் சுந்திரத்தைக் காணப் பிறந்தவன் என்று யாருக்குத் தெரியும்? இரண்டு முறை மரணதண்டனை அடையப் போகின்றான் என்று எந்தச் சோதிடரும் சொல்லியிருக்கவில்லை, மகன் கொள்ளைக்காரனாய், கொலைகாரனாய், சதிகாரியாய் அரசாங்க வைரியாய் இருப்பான்

அதனால் பெற்றோர்களுக்கே பெருந் தொல்லை என்று எந்தச் சோதிடனாகிலும் உளறிக் கொட்டியிருந்தாலும், அதற்காக அதையே உண்மையென நம்பி எந்தப் பெற்றோர்களும் கவலைப்படுவதோ, அல்லது அந்த மாதிரி சொல்லப்பட்ட மக்களை வளர்க்கும் கடமையிலிருந்து தவறுவதோ இல்லை. ஏன் அவர்களை இறுகப் பிணைத்திருக்கும் பாசமென்ற கயிறு இரும்பினாலோ, எஃகினாலோ செய்யப்பட்டதல்ல. அன்பெனும் பெரும் பாசத்தால் செய்யப்பட்டதல்லவா? எனவே எப்போதோ வரப்போகும் இன்னல்களுக்கு இப்போதே பயமென்ற சிறையில் வாடிவதங்குவானேன் என்றுதான் யாரும் நினைப்பார்கள்.

இவை இந்தக் கல்லறையில் தூங்கும் மனிதாபிமானியின் சோகமிக்க வரலாற்றிலே தெறிக்கும் கருத்துச் சிதறல்கள். பலரைப்போலவே பிறந்தான். அவன் பிறக்கும்போது வானம் இரண்டாகவில்லை. வால் நட்சத்திரம் தோன்றவில்லை. கடலில் ஜோதி தோன்றவில்லை. கருவாடு மீனாய்க் கடலில் குதிக்கவில்லை. சந்திரன் குளிர்ச்சியால் செந்தாமரை மலரவுமில்லை. சூரியன் வெப்பத்தால் அது சுருங்கிவிடவுமில்லை. வானவெளியில் தேவமாதா தோன்றவில்லை. வானவர் ஆகாய வீதியில் பவனி வரவுமில்லை. புஷ்ப விமானத்தில் தேவர்கள் பூலோகத்துக்கு வரவுமில்லை. எதிர்காலம் மிகப் பயங்கரமானதென்ற அறிகுறிகளோ இதாலியின் சிங்காதன வைரி என்பதற்கான அடையாளங்

கள் எதுவுமே தோன்றவில்லை மாஜினியின் பிறப்பில்.

அடிமைத்தன்மை, யுத்தம், வறுமை, அறியாமை இவற்றில் எதை ஒழிக்க நாம் பாடுபட்டாலும் வலிவுள்ள பல பேருடைய எதிர்ப்பையும், பகைமையையும் நாம் பெற வேண்டியிருக்கும், ஆகவே செயலற்றுக் கிடப்பதே மேல் என்று அவரவர்கள் சொந்த காரியத்தைக் கவனித்துக் கொண்டிருந்த மக்கள் வாழ்ந்த காலத்தில், அந்த மக்கள் மத்தியிலே ஒரு நடுத்தரக் குடும்பத்திலே பிறந்தான் மாஜினி என்பதுதான் உண்மை.

## இலக்கியக் கர்த்தா

இலக்கிய சம்பந்தமாகப் பல கட்டுரைகளை வெளியிட்டான். அந்தக் கட்டுரைகள் எதிலும், இவனைப் போர்ப்பாதைக் கிழுத்துச் செல்லும் புகை கிளம்பவில்லை. இங்கிலாந்தின் இலக்கிய மறுமலர்ச்சிக்கு இவன் கட்டுரைகள் இன்றளவும் மிகப் பயன் பட்ட வண்ணம் உள்ளன. அகில ஐரோப்பிய இலக்கிய சங்கங்கள் எதிலும் இவனுடைய தெளிந்த கருத்துப் பொதிந்த, சுவைமிக்க, ஆராய்ச்சிக்குகந்த கட்டுரைகளைக் காணலாம். வரையறுக்கப்பட்ட வயதுக்குச் சற்று முன்பே பல்கலைக் கழகத்தில் சேர்ந்து சட்டம் படித்துப் பட்டம் பெற்று 1826-ல் சட்ட நிபுணனானான். இவனுக்கிருந்த மதி நுட்பம், சுருசுருப்பு, வாக்குவன்மை, விவாதத்திறமை ஆகியவற்றைக் கண்ட மாணவர்கள் இவனிடம்

அன்பாகவும், மரியாதையாகவும் நடந்துகொண்டனர்.

ஆனல், இன்று யாரும் அணுகமுடியாத. ஆட்சியாளரின் அடக்குமுறை நெருங்க முடியாத, தடியடியும் துப்பாக்கியும் தன்னைத் தாக்க முடியாத எல்லையற்ற தூரம் சென்றுவிட்டான். அவனை இன்று யாரும் கல்லால் அடிக்கப்போவதில்லை. காரணம் அவன் கல்லறையிலே புகுந்துவிட்டான். சட்டங்கள் அவனை யணுகாது, ஏனெனில் சடலத்தைச் சமாதியில் மறைத்துவிட்டான். பழிச்சொற்களை அவன் காதுகள் ஏற்காது. ஏனென்றல் பாபிகள் நிறைந்த இப் பாரைக் கடந்துவிட்டான். ஆனல் இவைகளைக் காட்டிலும் கொடிய தண்டனைகளை அடைந்தடைந்து நெஞ்சத்தை எஃகுவாக்கிக் கொண்டவன் தான். அரசாங்கம் தோண்டியிருந்த எவ்வளவோ பயங்கரப் படுகுழிகளை எல்லாம் தாண்டிக் குதித்துத் தப்பித்துக்கொண்டவன் தான். பலநாள் படுக்கையிலே கிடக்கும் பழைய நோயாளி ஒரு மருத்துவனைவிடக் கெட்டிக்காரன் என்பதைப் போல், பல நாட்கள் அடக்கு முறைகளைத் தாங்கித் தாங்கி, பலமுறை நாட்டை விட்டு ஓடியோடி ஒரு தெளிந்த அரசியல் ஞானியாய் விட்டான்.

## மமதை

அதிகாரமமதையால் ஆளும் அரசர்களுக்கு அவர்களுடைய முன்னோர்கள் தேடித்தந்த சொத்துக்கள் இந்த ஆணவம் நிறைந்த அதிகார

போர்தைதானே என்று அவனுக்கு நன்றாகத் தெரியும். மாஜினி ஓயாமல் உழைத்தான்—உருமாறவில்லை. சலியாது உழைத்தான்—சஞ்சலம் கொள்ளவில்லை. கடுங்காவலில் கை விலங்குகளோடு தள்ளப்பட்டான்—கண் கலங்கவில்லை. ஏனெனில், அது அவன் கடமை என்றெண்ணிய காரணத்தாலும், களிப்பாலும். ஒருவன் பிறரது இலட்சியத்திற்காக இறக்க முடியும். ஆனால் அவன் வாழ்வதானால் தனது கொள்கைக்காகவே வாழ வேண்டும் என்பது தான் அவன் முடிவு. எங்கே துன்பம் இருக்கிறதோ அங்கே இன்பம் இருக்கிறது என்பது அவனுடைய திடமான நம்பிக்கை. ஒருவன் எப்போதும் வீரனாக வாழமுடியாது; ஆனால், மனிதனாக வாழ முடியும், மேலும் அந்த வாழ்க்கையையும் சுதந்திரமுடையதாக ஆக்க முடியும் என்பது அவனது குறிக்கோள். பலஹீனமான பாமரமக்களின் முன்னேற்றப் பாதையிலே தடைக் கல்லாயிருக்கும் அரச பீடத்தைப் பலமுள்ளோர் பாதையிலே படிக் கல்லாய்ப் போட முடியும் என்பது அவன் கோட்பாடு. உலக வாழ்க்கையின் நோக்கம் பிறருக்கு உதவிபுரிவது தான் என்பது அவன் கொண்டிருந்த முடிவு. வறுமையே தீமையில் தலை சிறந்ததும், குற்றத்தில் கொடியதுமாகும் என்பதே அவன் கண்ட உண்மை.

ஆகவே அன்றுவரை இலக்கியப் பணி புரிந்து வந்த மாஜினி அன்றிருந்த நாட்டுநிலையைச் சரிப்படுத்த சுதந்திர எண்ணத்தை மக்களுக்கு உண்டாக்க,

பல கட்டுரைகளைத் தீயில்தோய்த்து வெளியிட்டான். அவன் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஏகாதிபத்தியத்திமிர்பிடித்த அரசாங்கத்தின் நெஞ்சில் பாயும் அம்புகளாயின. இலக்கியக் கர்த்தா இன்று புரட்சிக்காரனுய்விட்டான். இவனுடைய இலக்கியத்தைப் புகழ்ந்த மேதைகளெல்லாங்கூட அன்றுதொடங்கி இவனிடம் அதுவரை கொண்டிருந்த மேன்மையைக் குறைத்துக்கொண்டார்கள்.

## அபாய மனிதன்

"மேதை" என்று இவனைக் கொண்டாடிய அவர்களே இன்று இவனை ஓர் அபாய மனிதன் என்றனர். பொதுநலவாதி புகழை விரும்பமாட்டான். இதற்கு மாஜினி புறம்பானவனல்ல. ஆகவே மேதைகளின் கண்டனத்தை, மேட்டுக் குடிகளின் மிரட்டலை, இவன் மதிக்கவில்லை. பொதுவாக இத்தாலிய மக்களும் சிறப்பாக இளைஞர்களும், குறிப்பாகத் தானும், இத்தாலிய நாடு விடுதலையடையப் பல துன்பங்களை யடைய வேண்டிவரும் என்று தீர்மானித்தான். ஆகவே மாஜினி அதுவரை கொண்டிருந்த இலக்கிய ஆர்வத்தைக் கைவிட்டு, ஒரு முழு அரசியல்வாதியாக மாறிவிட்டான். அரசியலைப்பற்றி மாஜினி எழுதிய கட்டுரைகள் மேன்மேலும் சுதந்திர ஆர்வத்தைத் தூண்டின. அந்த ஆர்வம் எழுத்கோடு நில்லாமல் 1880-ல் பிரான்சில் நடந்த பெரும் புரட்சிக்குச் சற்றுப்

பின்பு நடந்த கார்பனேரி புரட்சியில் கலந்துகொண்டான். பயிற்சிபெற வேண்டுமல்லவா? அதற்காக அந்தக் குற்றத்திற்காக 6 மாத சிறைத்தண்டனை அடைந்தான். அரசாங்கம் இப்போதுதான் ஒரு முதல் எதிரியையுண்டாக்கியிருக்கிறது. எதிர்ப்பவனும் இப்போதுதான் தோன்றியிருக்கிறான். அந்த 6 மாதத்தண்டனைக்குச் சவோனுக்கோட்டைச் சிறையில் தள்ளப்பட்டான். காரணமில்லாமலே பலரைச் சிறையில் தள்ளும் அரசாங்கத்தில் உள்ள ஒரு நல்ல மனிதனுக்கு இருப்பிடம் சிறைச்சாலை தானே என்று சிரித்தான் மாஜினி. சுற்றிலும் சுவர்கள், குறுக்கே கம்பிகள், உள்ளே நான், வெளியே என் இருதயம், எழுத்துக்கள் என்னைப் பின்பற்றும் மக்கள் வெளியிலே, வழிகாட்ட வேண்டிய நான் உள்ளே, இதுவே ஒவ்வொரு சுதந்திர மனிதனுக்கும் படிப்பினை. இதைவிட நான் வேறு என்ன அவர்களுக்குச் சொல்லிவிட முடியும். சிறையில் 6 மாத ஓய்வென்றால் உறங்கிக் கழிப்பதற்கா? உறக்கந்தான் எப்படி வரும்? உறங்காமல் சிந்தித்துக்கொண்டிருப்பதற்காகத் தான் வேண்டிய உதவிகள் செய்துவைத்திருக்கின்றார்கள்.

## சிறையில்

பக்கத்து அறையில் எவனோ ஒருவன் பயங்கரக்கனவு கண்டு அலறிக்கத்துகிறான். அதற்கடுத்த அறையில் எவனோ ஒருவன், மகனே! மகனே! என்று கத்துகிறான். பாவம், அவன்

தன் மகனைக் கொலைசெய்த கொடியவனைக் கொலை செய்ய எத்தனித்தான் என்ற குற்றத்திற்காகச் சிறையிலே 10 ஆண்டுகள் தள்ளப்பட்டிருக்கின்றான். அந்தோ! அங்கே ஒருவன் வயிற்று வலியால், ஐயோ! ஐயோ! என்று அவஸ்தைப் படுகிறான். சிறைகாப்போன் அயர்ந்து தூங்குகின்றான். அவன் படுத்திருக்கும் இடத்தில் கொசுக்களுமில்லை, மூட்டைப்பூச்சிகளுமில்லை. வண்டுகள் பறந்துவந்து அவனை வாட்டவுமில்லை. அவ்வளவு பாதுகாப்போடு உறங்குகின்றான். நாம் இருக்கும் இந்த அறையைச் சுற்றிப்பார்த்தால் கொசுக்கள், அதைவிட அதிகமான எண்ணிக்கை மூட்டைப்பூச்சிகள், அந்த அளவுக்குச் சற்றேறக் குறைய வண்டுகள். நாளை காலை தூக்குத் தண்டனையடையப் போகும் குற்றவாளியின் துடிதுடிப்பு, அவனை வந்துவந்து பார்த்துச்செல்வோரின் பரிதாபக்குரல், இவ்வளவுக்குமிடையே நாம் இருக்கிறோம். நாளை நமக்கு என்ன வேலையோ? செக்கிழுக்க வேண்டுமோ, கல்லுடைக்கவேண்டுமோ, எதுவாயினும் வரட்டும் என்று ஆறுதலடைந்து கிடைத்த நேரத்தை உருவான திட்டம் தீட்டப் பயன்படுத்திக்கொண்டான். அளவுகடந்த துக்கத்தால் அருமையான கருத்துக்களை விட்டுவிடுவோம், ஆர்வமிகுதியால் கடமையை மறப்பவர்களும் உண்டல்லவா? அதைப் போன்றவனல்ல மாஜினி. அவன் அளவுகடந்த பகுத்தறிவு படைத்தவன் மாத்திரமல்ல. அதைப் பல்கலைக் கழகத்தில் நிறைபோட்டுப் பார்த்தவன்.

சொன்னதைக்கேட்டுத் தலையசைக்கும் சிறு குழந்தையல்ல. அவன் ஆட்டினுல் ஆடும் விசை வைத்த பொம்மையுமல்ல. அவன் அகண்ட உள்ளக் கடலில் சிந்தனை அலைகள் ஓயாது மோதிக்கொண்டிருக்கும். சில நேரம் அவன் சிந்தையில் தெளிவின் ஒளி தோன்றும். வானம் மின்னி அதிரும்போது ஒரு பயங்கர உணர்ச்சி தோன்றுவதைப்போல ஓர் உணர்ச்சி தோன்றும். மக்களுக்கு முன்னேற்றப் பாதையைக் காட்டத் துடியாய்த் துடிப்பான். கரைகாணுது தத்தளிக்கும் நாவாய்க்கு மாலுமி ஓர் கலங்கரைவிளக்கம்போல் நிற்க எண்ணினுன். தனது மனதில் பழைய நம்பிக்கை குடிகொண்டிருக்கும் வரையில், பூரணமாக உணரும் சக்தியோ, சுதந்திர எண்ணமோ இடம் பெருது என்றறியாத மக்களை எப்படித் தட்டி எழுப்புவது என்ற ஆராய்ச்சியிலேயே நேரத்தையும் நினைப்பையும் செலுத்தினுன். கழிந்துபோன நாட்களைப்பற்றி வருந்தாமல், எதிர்காலத்தைப்பற்றி அஞ்சாமல், இன்று செய்யும் காரியத்தில் கண்ணுயிருக்க வேண்டுமென்ற தத்துவத்தை அறியாத மக்களைக் கண்டு கலங்கினுன்.

## எண்ணம்

ஆகவே தன்னுலியன்றவரை மக்களைத் தன்பால் இழுத்து, அன்றுவரை வேற்று நாட்டாருக்கு அடிமைப்பட்டிருக்கும் அவலநிலையைக் களைந்தெறிய எவ்வளவோ கஷ்டங்களைச் சகிப்புத்தன்மை

யோடு ஏற்றுக்கொள்ள முன் வந்தான். ஆனால், அந்த உரிமையை அவனுக்கு அன்றைய மூவல்லரசுகள் தரமறுத்தன. வீரம் செறிந்த அவன் உள்ளத்தையும், உள்ளம் கொட்டித்தள்ளிய உயர் வான எண்ணங்களையும் ஒவ்வொன்றாகச் சமூகத் தில் பரப்ப எண்ணினான். இதற்கு உறுதுணை வேண்டும், கட்டுக்கோப்பான கழகம் வேண்டும். சட்டரீதியான அல்லது சந்தர்ப்பத்திற்கேற்றாற் போல் சட்டவரம்பைத் தாண்டிக்குதிக்கும் தன் மானத் தொண்டர்கள் வேண்டும். உடல், பொருள் ஆவியாகிய அத்தனையும் அர்ப்பணிக்கத் தகுந்த வீரர்கோட்டம் அமையவேண்டும். அவ்வப்போது அவர்களுக்கறிவிக்கத்தக்கதோர் திட்டம் வேண்டும். மறுத்துக்கூறும் பத்திரிகைகளுக்கு மறுப்பு எழுதவாகதது ஓர் செய்தித்தாள் வேண்டும். எஃகு போன்ற உள்ளம் படைத்த இளைஞர்கள் வேண்டும் எந்த நேரத்திலும் ஊண் உறக்கமின்றிப் பணியாற்ற பக்குவம் தெரிந்த காளைகள் வேண்டும் தூக்குமரத்தில் தொங்கவும் தயங்காத தூய நெஞ்சினர் வேண்டும். பொதுநலத்தைச் சுய நலத்துக்குப் பலியிடாத வழிகாட்டிகள் வேண்டும், உடன்படித்த மாணவர்கள் உலகறியாப் பேதை கள். கொட்டும் மையை ஒட்டியெடுக்கும் மை உறிஞ்சி அட்டைகள். சாட்டையைச் சுற்றித் தரையில் அடித்தவுடன் 'கரகர' வெனச் சுற்றும் பம்பரம் போன்றவர்கள். பாடத்தைப் படித்து, படித்ததைப் படிதவறாமல் ஒப்புவித்துப் பக்கத்து வகுப்புப் பலகையில் இடம் தேடும் இளைஞர்கள்.

அவர்கள் அன்றாட வேலைகளுக்கே அடிமையாய் விட்டார்கள். ஒன்று முதல் பன்னிரண்டுவரை ஓயாது வளைந்து சுற்றும்காலக்கருவியின் (கடிகாரம்) கைகளைப் போன்றவர்கள். புதுயுகங் காண மனமில்லாத அப்பாவிகள். இவர்களிடம் பேசுவது எழுதிய சித்திரத்தோடு பேசுவதற்கொப்பாகும், என மௌனமுடிவு கொண்டான். அமைதி, ஒரு பெரிய அதிர்ச்சிக்கு அஸ்திவாரம் என்ற உண்மையைப் படம் பிடித்துக் காட்டுவதைப்போல், மாஜினி தன் ஓயாத பேச்சிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டான்.

மனித ஜீவாதாரமான உரிமைகளை எங்கேயோ யாரும் காண முடியாத புதைபொருளாக்கி விட்ட புல்லர்களின் செய்கையை எண்ணுவான். ஒன்று திரளும் மக்கள் சக்தியைப் பகுத்தறிவு என்ற உலைக்கூடத்தில் பழுக்கக் காய்ச்சி, அக்கிரம அரச பீடத்தின் மேல் இழுத்தால் என்னவென்று எண்ணினான் மாஜினி.

"குதிரைக்குட்டியைச் சவாரிக்கும், காளையை வண்டிக்கும் பழக்குவதற்கு ஆட்கள் எளிதிற் கிடைப்பார்கள். ஆனால் மனித உரிமையை, தேசத்தை ஆள்வோரின் கடமை முதலியவற்றை நிர்ணயிப்பதற்கான திறமையையும், அறிவையும் இளைஞர்கட்குப் புகட்டி, அவர்களை நல் வழியில் செலுத்தவல்ல மேதாவிகளைக் காண்பது அரிது" என்று அறிஞன் சாக்ரடீஸ் சொல்லியதைப்போல்,

நயவஞ்சகத்தால் நாட்டாண்மை கொள்வோரும் மக்கள் விரும்புகிற ஒன்றையே செய்து மகுடந் தரிப்போரும் அதிகமாக உற்பத்தியாவார்கள். ஆனால் மக்கள் அறியாமல் கொண்டிருக்கின்ற எண்ணத்துக்கெதிராகப் பிரசாரம் செய்து அவர்கள் மடமையை நீக்கவல்ல ஆற்றல் பெறுவோர்கள் மாஜினியைப் போல எங்கோ ஒரு சிலர் தான். அவர்கள் ஆற்றலைப் பயன்படுத்திக்கொள்ளாத நாடு பாழான நாடு தான் என்றாலும், இத்தாலி ஓரளவுக்கு அவன் சொல்வழி நடக்கத் தயாராய் விட்டது. இந்த நிலையைச் சரியாகவும் தனக்கும் நாட்டுக்கும் சாதகமாகவும் பயன்படுத்திக்கொண்டு பலமான அஸ்திவாரம் போடத் தீர்மானித்துவிட்டான். ஏனெனில், மக்கள் சார்பாகத் தான் எதிர்த்துப் போராடப் போவது பழமையையல்ல— பாராளுமன்றத்தை, பாராளும் மன்னர்களை, சட்டத்தை, சர்க்காரைச் சந்திக்கிழுக்கப் போகின்றான். அதுவும் சமாதான மேடையிலல்ல, சமர்க்களத்தில். படை பலம் கொண்டல்ல, பண பலம் கொண்டல்ல, வாள் பலம் கொண்டல்ல, வாய்பலம் கொண்டே. அதுமட்டுமா? மக்கள் ஒற்றுமை, உணர்ச்சி என்ற உத்வேகத்தைக் கொண்டு. சாதாரணமான காரியமல்ல. சாவே 'வா! என்றதைப்போன்ற விஷவிளையாட்டு. ஒருவேட்டு சப்தத்தைக் கேட்டு ஊரே கதவை யடைத்துக்கொண்டால், தான் ஒருவனே நடுத்தெருவில் நின்று, வேந்தன் விரட்டும் வேட்

டை நாய்களுக்கோ, வீரர்கள் ஏறிவரும் குதிரைகளின் காலடிகளுக்கோ, அவர்கள் கையிலிருந்து குறிபார்க்கும் துப்பாக்கிக் குண்டுகளுக்கோ குப்புற விழுந்து சாக வேண்டி வந்தாலும் வரும். எனினும் துணிந்து விட்டான்.

## உறுதி

"தொழில் எவ்வளவு கேவலமானதாக அருவறுப்புள்ளதாக இருந்தாலும் அதைச் செய்வதில் அவமானமில்லை, சோம்பல் ஒன்றுதான் அவமானம்," என்று ருஷ்ய அறிஞர் டால்ஸ்டாய் சொல்லியதைப் போலத் தான் செய்யப் போகும் காரியம் எவ்வளவு பயங்கரமானதாக இருந்தாலும் அதற்காக அவன் அவமானப்படவில்லை. நாட்டுக்காக ஏதாவது தன்னாலியன்றதைச் செய்யாமல் விட்டால் தான் அவமானம் என்று கருதி அந்தத் தீ விளையாட்டில் குதித்தான், ஏன்? எவன் தன்னுடன் பிறந்த மக்களுக்குத் தொண்டுசெய்கின்றானோ அவனே பக்தன். அவன் இதயமே கடவுள் தேடிச் சென்று அமரும் சிம்மாசனம் என்ற சித்தாந்தத்தையுடையவன் மாஜினி. ஆகவே அவன் எந்தவிதப் பயனையும் கருதாமல், எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் தியாகத் தீயில் குதித்து விட்டான்.

"சோம்பலும், சோர்வுமாக நூற்றாண்டுகள் உயிர்வாழ்வதை விட, பெருமுயற்சியோடு ஒருநாள் வாழ்ந்திருப்பதே மேல்" என்ற புத்தர் பொன்மொழிக் கொப்ப.

"பயம் என்பது அறியாமையிலும், சலனபுத்தியாலும் உண்டாகிறது" என்ற ராபின்சன் மொழிக்கொப்பத், தன்னை எல்லாவகையாலும தகுதியாக்கிக்கொண்டான் மாஜினி. இவ்வளவு சிந்தனைக்குப் பிறகு, அடிவானம் மின்னி அதிர்வதுபோல் உச்சிமுதல் உள்ளங் கால் வரை ஓரே அதிர்ச்சி தோன்றும். வானத்தை நோக்கி ஓடும் வானக் குழாய் போல், அவன் அடிவயிற்றிலிருந்து கிளம்பும் ஒரு பெரு மூச்சு, அதுவே ஒரு விஷப்புகையானால், காம வெறி பிடித்து வேற்றரசர்களுக்கு அரியாசனம் அளித்து, வெட்கமில்லாமல் வெண்சாமரம் வீசும் ரோம ஏகாதிபத்தியம் மவந்தழியாதா என்று நினைக்கவும் செய்வான்.

கொந்தளிப்பிற்குப் பின்னால் அமைதி யடையும் கடல்போல், தன் நெஞ்சில் குமுறிய எண்ணங்களுக்குப்பின் மாஜினி சற்று நேரம் அமைதிகொள்வான். ஆனால் புரட்சிப் புகை அவன் உள்ளத்தைக் கவ்விக்கொண்டிருந்தது. மாஜினி உலகானுபவம் பெறாத பள்ளிச்சிறுவனாயிருந்தபோதே நாட்டின் நிலைமையை எண்ணி நலிந்தான். நள்ளிரவில் கொள்ளையடிக்கும் நயவஞ்சகர்களைப் போல் பகலில் படாடோபத்தின் மூலம் பகற்கொள்ளையடித்து, பரமனின் நாமாவளியே பாபமன்னிப்பென ஏமாற்றிய எத்தர்களிடையே தான் பிறக்க நேர்ந்ததை எண்ணி உள்ளம் உடைந்தான். உடைந்த உள்ளத்தின் அறிகுறியாக ஏதாவதொரு சின்னத்தை அணிய எண்ணினான்.

## ஆராய்ச்சி

ஒவ்வொரு நிறத்தின் தன்மையையும் குணத்தையும் ஆராயத்தலைப்பட்டான். செந்நிறத்தை நினைத்தான். உடனே அபாய அறிவிப்பு என்ற எண்ணம் உதித்தது. நமக்கும் சமூகத்துக்கும் ஒரு சிலர் அபாயத்தை விளைவித்துக் கொண்டிருக்கும் போது நாம் யாருடைய கண்களுக்கும் அபாய அறிகுறியாகத் தென்படக்கூடாது. எனத் தீர்மானித்து அந்த நிறமணிந்த சின்னத்தை அணிவதைக் கைவிட்டான். இரண்டாவதாகப் பச்சை நிறத்தை எண்ணினன். அது பரவசத்தோடு பலரை வரவேற்கும் நிறந்தான். எனினும், சூது நிறைந்த பயங்கர உலகில் நமக்குப் பரவசமேது? உலகம் ஓர் பாழ் மண்டபம். மனிதஜீவன் அதில் ஓர் பச்சைக்கிளி. பழங்களேது அங்கே? ஆகவே பரவசமேது வாழ்வில்? அதனல் பச்சை நிறத்தையும் கைவிட்டான். அடுத்தது நீலநிறத்தை நினைத்தான். காதலர் மகிழக் களிப்பைத்தரும் நிறமும், பன்னெடுங்காலங்களாக வாடும் பயிரினங்கள் வானத்தை நோக்கும்போது, 'கவலை வேண்டாமெனச் சொல்லும் கார்மேகங்கள் கொள்ளும் நிறமல்லவா அது? அதனுற்ருன், "எத்தனையும் வான் வறண்ட காலத்தும் பைங்கூழ்கள் மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவை போல்" என்று அறிஞர்கள் பாடியுள்ளார்கள். ஆனல், நாம் யாரைப்பார்த்துக் கவலை வேண்டாமெனச் சொல்லப் போகின்ருேம்? இன்று நமக்கேது அந்த நிலை? ஆகவே அந்த நீலநிறமும்

வேண்டாமென முடிவு கட்டினான். அடுத்தது காவி நிறத்தை எண்ணினான், குடும்பத்தைப் பரிபாலிக்கத் திறமையற்றவர்களுக்குப் பாதுகாப்புத் திரையாக அமைந்த நிறம். காதலியை, கண்போன்ற மக்களை, அன்பால் ஆரத்தழுவும் ஆற்றல் இருந்தவரையிலும் அணைத்து, அது முடியாதபோது ஆண்டவன்மேல் பழிபோட்டு ஆரணியம் நோக்கி நடக்கும் அற்பர்கள் அணியும் நிறமது. எதிர்த்து நிற்கும் பயங்கர சக்திகளை எதிர்த்து நிற்க ஆற்றலற்று, அரனடியார்கள் எனப் பாசாங்குசெய்து காஷாயமுடுத்திக் கமண்டலமேந்திய கபடவேட சன்னியாசிகள் அணியும் நிறமது இன்பத்தைச் சுவைத்துப் பின், இவையெல்லாம் மாயையெனப் பேசி எட்டாத மோட்சத்திற்குக் குடிபுக எண்ணும் மடமைக் குடிலர்களின் நிறமது: மன்பதைக்கு மாயா வாதங் காட்டி, மனித சமூகத்தைச் சித்திரவதை செய்து, தண்டு, கமண்டலம், தண்டகாருண்ணியம் என்றெல்லாம் ஏமாற்றும் எத்தர்களின் கைமுதல் அந்த நிறம். ஆன்மா ஆண்டவனோடு ஐக்கியமாய் விடுகிறது. இந்த அற்ப உடல் அணங்குகளோடு உலக சிற்றின்பத்தில் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றது. உடலுக்கும் ஆன்மாவுக்கும் ஒருவித சம்மந்தமுமில்லை• உடலுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள தொடர்பு, புளியம்பழத்திற்கும், அதன் மேலுள்ள ஓட்டுக்கும் உள்ள தொடரைப் போன்றதுதான் என்று கற்புள்ள மங்கையரைக் கற்பழித்துக் காவலில் திண்டாடி வழக்கு மன்றமேறி வாதாடித் தன் மானத்தைக் காக்கும்படி வக்கீல் காலில் விழுந்து மான

மழிந்து திரியும் சன்னியாசிகளின் சண்டாளத்தனத்துக்குத் தொண்டு செய்வது அந்த நிறம். ஊரார் பொருளை உபாதானத்தின் பேரால் வாங்கித் தன்னைப் பொன்காய்த்த மரமாக அலங்கரித்துக்கொண்டு, பழம் போன பாதையைப் பாலால் கழுவி, பாவத்துக்குத் தத்துவார்த்தம் கூறிப் பாமரரை ஏமாற்றித் திரியும் ஈனர்கள் மெச்சிய நிறம் அது. ஆகவே அது வேண்டவே வேண்டாம். நாம் வாழப் பிறந்திருக்கின்றோம். அதுவும் சுதந்திரமாக. "பல்லெல்லாம் தெரியக் காட்டிப் பருவிரல் முகத்திற் கூட்டிச் சொல்லெல்லாம் சொல்லி நாட்டித், துணைக் கரம் விரித்து நீட்டி, மல்லெலாம் அகல ஓட்டி, மானமென்பதனை வீட்டி, இல்லெலாம் இரப்பதந்தோ இழிவிழி வெந்த ஞான்றும்" என்ற முதுமொழியைக் கைவிட்டு, எண் ஜாண் ஜாணுகித் தாவென்று கேட்கும் தரித்திரப் பிச்சைக்காரர்கள் அணியும் நிறம் அது. ஆகவே, அது வேண்டாம் என நிராகரித்து விட்டான். பிறகு மஞ்சள் நிறத்தை எண்ணினன். தள்ளாமையைத் தெரிவிக்கும் நிறம் மஞ்சள் நிறம். மங்களகரமானது என்று எண்ணுத நாடு அது. இலையுதிர்காலத்தில் எல்லா மரங்களின் இலைகளும் கொள்ளும் நிறம் அது. மேலும், மஞ்சள் நிறமடித்த மாளிகையில் வாழ்ந்த இளங் காதலர்கள் இரண்டு திங்களாவதற்குள் தங்கள் மணப் பிடியைத் தளர்த்திக் காதலுக்குக் கடைசிப் புள்ளியை வைத்துவிட்டார்கள் என ஆங்கில அறிஞன் ஸ்டாபோர்டு ஹெர்னெஸ் (Stafford Herness) என்பவன் எழுதியிருக்கின்றான். பூனைக்கண்களடைந்த நிறம் அது. தெளிவில்

லாத மங்கல் நிறம். ஆகவே அதுவும் கூடாதெனக் கைவிட்டான். நெடுநேரம் சிந்தித்தான் சிறையில் மாஜினி. முடிவு காணுமுன்னம், தங்களுக்கு விடுதலை என்ற ஏடேந்திய சிறையதிகாரி வந்துநின்றான் எதிரில். "தண்டனை நாட்கள் முடியவில்லையே, இதற்குள் விடுதலையா?" என்றான் சிறைக் கைதி மாஜினி. பாவம், குற்றம் புரிந்தவர்களைத்தான் சிறையில் போடுகின்றார்கள் அரசாங்கத்தார் என்று அதுவரை தவறாக நினைத்துக்கொண்டிருந்தான் போலும். ஒருவன் கெட்ட பொருளைக் கொஞ்சம் மலிவான விலைக்குக் கேட்டாலே சிறையில் போடவேண்டிய அளவுக்குப் பல சர்க்கார்கள் தோன்றியிருக்கின்றன என்று 19-வது நூற்றாண்டில் வாழ்ந்த மாஜினிக்கு எப்படித் தெரியும்?

## சிறை

குற்றங்களை விசாரித்த பிறகுதான் சிறையில் தள்ளுவது என்ற முறை மாறி வெகு நாட்களாய் விட்டன. பனிக்கோ, குளிருக்கோ பயந்து முக்காடு போட்டுக்கொண்டு போனாலே போதும். உடனே பரிசு சிறைதான். தன் கட்சிக்கு விரோதி, சந்தேகப் பிராணி, இரவில் திரிந்தால், யாராவது அவன்மேல் மொட்டைக் கடிதம் எழுதிவிட்டால் சிறைதான். வழக்காட உரிமையில்லை. இவ்வளவு நாட்கள் தான் சிறையில் இருக்கவேண்டும் என்ற வரையறையுமில்லை. பேச்சுரிமை, எழுத்துரிமை, எண்ண உரிமை, தொழ

உரிமை என்றெல்லாம் சர்க்காரின் பேனாவும், தாளும் பேசும். ஆனால் யாராவது பேச எழுந்தால் சர்க்காரின் துப்பாக்கிகள் பேசும். பாவம் இது தெரியாதவர்கள் எண்ணற்றவர் சிறையில் வாடி வதங்கியிருக்கின்றார்கள். இதைத் தெரிந்துகொள்ள முடியாத காலமல்ல மீஜினி காலம். ஆனால் அவன் தெரிந்துகொள்ள வேண்டிய சூழ்நிலையின் முதற்படியாக இப்போதுதான் சிறையிலே இருக்கின்றான். அதுவும் காலம் முடியா முன்னம் விடுதலை. தரை நோக்கிச் சிந்தித்துக்கொண்டிருந்த தன்மானத் தொண்டன், இதைப்போலக் கேட்டபடியே தலைநிமிர்ந்தான். 'விடுதலை' என்ற உத்திரவைக் காட்டினான் வாளேந்தி. "என்மேல் அரசாங்கம் காட்டிய கருணையா" என்றான் கர்மவீரன். "இல்லை?, குற்றம் ருசுவாகவில்லையாம், அரசாங்கத்தின் ஆத்திரவிளைவுதான் தாங்கள் அந்தகாரச் சிறையில் தள்ளப்பட்டதற்குக் காரணம், ஆசையால் விடுதலையாம், இதோ! அரசாங்கத்தின் முத்திரையிட்ட ஆணை" என்றான் காவற்காரன்.

## விடுதலை

"குற்றம் ஒன்றிருந்தாலல்லவா ருஜுவாக முடியும்? என்னை உள்ளே தள்ளிய பிறகு ஏதாவது ஒரு குற்றம் என் நிழல்பட்டிருக்கிறதா என்று பார்த்திருப்பார்கள். எங்கே கிடைத்திருக்கப்போகின்றது? இவனுக்கேன் அரசாங்கப் பொது நிதியிலிருந்து தண்டச்

செலவு? என்று வெளியே நெட்டித்தள்ளுகின்றார்கள். அல்லது என் நடவடிக்கைகள் கொஞ்ச நாள் முடங்கிக் கிடக்கட்டுமே என்ற ஏற்பாடாயிருக்கலாம். அல்லது, என்னைச் சிறையில் தள்ளியதன் மூலம். என்னைப் பின்பற்றுபவர்களுக்கு, அல்லது எதிலும் நேரடியாகப் பங்குகொள்ள முடியாமலிருக்கும் சுதந்திரப் பிரியர்களுக்கு, இது ஓர் அபாய எச்சரிக்கையாக இருக்கட்டுமே என்ற முன்னேற்பாடாக இருக்கலாம் அல்லது ஆசாங்கத்துக்கு அதிக வரியைச் செலுத்தி அதைத் தன் காலடியிலே கிடக்கும் பந்துபோல் விளையாடும் பணக்காரர்களுக்கு இந்த நிகழ்ச்சி ஒரு கண்துடைப்பாக இருக்கலாம். அல்லது எனக்கே கூட, நான் இனிமேல் இப்படிச் செய்யாமலிருப்பதற்குக் காட்டும் பயத்தின் படிப்பினையாக இருக்கலாம் எது எப்படியிருந்தாலும் எனக்கு இன்று விடுதலை. நான் மட்டும் விடுதலையடைந்து பயனில்லை. என் தாயகமாம் இத்தாலிய நாடே விடுதலையடைந்து தீரவேண்டும். அதற்காக நான் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கையில், நான் இந்த உலகத்திலேயே இருந்து விடுதலையானாலும் கவலைப்படப் போவதில்லை. இந்தச் சிறைச்சாலையின் கதவுகள் எப்போதும் திறந்திருக்கட்டும். என் இஷ்டமானபோது உள்ளே வருகின்றேன். சர்க்கார் விரும்பும்போது வெளியே அனுப்பட்டும். "மகிழ்ச்சி" என்று மடமட வென வெளியே நடந்தான் மாஜினி.

## நாடு கடத்தல்

வெளியே பத்தடி நடந்தான். மீண்டும் ஓர் உத்தரவு. என்ன அது? மாஜினி கேட்கின்றான். விடுதலைதான், என்றாலும் தாங்கள் பிரான்சு நாட்டு எல்லையில் இருக்கக் கூடாது. "இது தான் இந்த மறு உத்தரவு." "அதையே தான் நானும் விரும்பினேன்." சிந்திக்க நேரம், திட்டந் தீட்ட ஓய்வு, ஒன்று சேர்க்க உறுதி, இவ்வளவு வசதியை அளித்திருக்கிறது இந்த மறு உத்திரவு. மிகமிக நன்றி என்று சொல்லுங்கள். நானும் இதோ மார்சேல்சுக்குப் போகிறேன்', என்று வழிநடந்தான். முதல் பரீட்சையில் தேறி விட்டான். எனினும் எதிர்காலம் மிகப் பயங்கரமான தாகக் காணப்பட்டது. காரணம், இத்தாலிய மக்கள் எதற்கெடுத்தாலும் சந்தேகப் பிராணிகள். போப் பாண்டவர் உத்திரவு கேட்காமல் புகைபிடிக்கவுமாட் டார்கள் என்று சொல்லுமளவுக்குப் புத்தியைப் புறம்பாக ஓட்டியிருந்தார்கள். இப்படிப் பழகிப் போன மக்களை ஓர் புதுப் பாதைக்கிழுப்பதென்பது கடினமான காரியந்தான். என்றாலும் செய்து தீர வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது நாடு. வேறு வழியில்லை. வேற்றரசாங்கத்தின் வேல் விலாவைக் குத்துகிறது. இந்த சிந்தையில் வழிநடந்தான் அன்று அவன் நடந்த பாதை கல்லும், முள்ளும், கள்ளியும், புல்லும் நிறைந்ததாகவே காணப்பட்டன. எதிர்நோக்கிவரும் யாரையும் காண அவன் மனம் இடந்தரவில்லை. சுதந்திரச் சூறாவளியே அவனைச்

சூழ்ந்துகொண்டது. அன்று தொடங்கி மாஜினி ஒரு தூங்கும் எரிமலையாய்விட்டான். தன் உரத்த குரலில் உதவாக்கரைகளுக்கு ஓர் எச்சரிக்கை விட எண்ணினான். ஆயினும் காலம் கனியவில்லை. "காலங் கருதிக் காத்திருப்பர் கலங்காது ஞாலங் கருதுபவர்.' என்ற பொதுமறை தந்த பொய்யாப் பெருந்தகை வள்ளுவன் வாக்கிற்கிணங்கக் காலத்துக்காக காத்துக்கொண்டிருந்தான்.

## காரணமென்ன ?

இவன் இவ்வளவு ஆவேசப்படுவதற்குக் காரணமென்ன? 19.வது நூற்றாண்டின் இடைக்காலம். பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்டிரியா என்ற மூவல்லரசுகளும், இத்தாலியை, ரோம், நேபிள்ஸ், மிலான் என்ற மூன்று கூறாக்கி, மேற்சொன்ன மூவல்லரசுகளும் அடக்கியாண்டதுதான் மாஜினி சீறி எழுந்ததற்குக் காரணம். அயல் அரசை நீக்கவேண்டும் என்ற அதுதான் அவன் ஆசை. அந்த அரசுகள் இடும் கட்டளைக்கு அடங்கி நடக்கமுடியாது. இதுதான் அவன் கொண்டிருந்த ஆத்திரம். தன் தாயகத்தின் செல்வர்கள் வேற்றரசுக்கு வெண்சாமரம் வீசுகின்றனர் என்ற இதுவே அவனடைந்த வேதனை. அந்தப் பேரரசை வல்லரசுகள் காட்டிய அடிமை முறிச்சீட்டில் கண்மூடிக்கொண்டு கையெழுத்திட்டுவிட்டனர் கனதனவான்கள். பாரீஸ் நகர சீமாட்டிகள் இவர்கள் மனத்தைப் பேதப்படுத்தி விட்டார்கள்." இதுதான் இவன் கொண்ட கோபத்திற்குக்

காரணம். எப்படியும், இந்த மூவல்லரசை முச்சந்திக் கிழுக்க வேண்டும். வெற்றி தோல்விகளைப் பற்றிச் சிந்திக்க நேரமில்லை. வினை ஒன்றுதான் தன் கண் முன் தோன்றுகின்றது. ஆனால், தகுதியான தலைவனில்லாத நேரம். இளைஞர்களை ஒன்றுபடுத்திச் சிதைந்த இத்தாலியை ஐக்கியப்படுத்தச் சிந்தனையாளர்கள் இல்லாத கொடுமை. அதன் வறுமையைத் தவிர்க்க தக்கதோர் வழிவகுத்துக் கொடுக்க வழிகாட்டிகள் தோன்றாத கொடுமை. மாஜினி தன் எண்ணத்தில் தோன்றிய எண்ணப்பாறைகளே கடலின் கற்பாறைகளாக மாறினால் மூவல்லரசுகளின் ஆணவ அதிகாரமென்ற தோணியைச் சுக்கு நூறாக்கலாமே என்றெண்ணுவான்.

## இதுவா ?

சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகம் என்ற அருமையான வார்த்தைகளை நல்கிய சுதந்திரத் தந்தையும், ஜனநாயக கர்த்தாவுமான ரூஸோவின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு முதன் முதலில் சுதந்திரம் பெற்ற பிரான்சு நாடு தன் நாட்டைச் சீர்குலைப்பதை எண்ணி வருந்தினான். முதன்முதல் நோபெல் பரிசு பெற்ற ரோமன் ரோலாந்து, என்ற அறிஞனை ஈன்றெடுத்த பிரான்சு தன்நாட்டைப் பணியவைத்ததை எண்ணிப் பதைபதைத்தான். வீர நெப்போலியனைத் தங்கத் தொட்டிலிலாட்டிய பிரான்சு தன் நாட்டைப் பிணக்காடாக்குவதை எண்ணி மனம் உடைந்தான்.

எந்த நாட்டாரும் தன் நாட்டைக் கடவாமல் கோடிக் கணக்கான பணம் செலவு செய்து மாகிநோ அரண் கட்டிக் காத்த பிரான்சு நாடு தன் நாட்டை மயானக்காடாக்குவதை எண்ணி மனம் புழுங்கினான். அழகே உருவான அணங்குகள் நடனமாடிய பாரீஸ் நகரைத் தலைநகராகக் கொண்ட பிரான்சு தன் நாட்டை எலும்பும் தோலுமா யாக்குவதை எண்ணி எண்ணி நலிந்தான் மாஜினி. வீரர்கள் நடமாடிய இடம் வெம்புலிகள் நடமாடும் கானகமாய் விட்டதை எண்ணி மனம் உடைந்தான். பிரான்சின் மேல் குற்றமில்லை. அது வைத்திருந்த பாஸ்டில் சிறை உலகிலேயே மிகப் பயங்கரமானது.

அது இடியோசையைக் கேட்ட அரவம்போல் இருந்த மக்களை, ஏன் என்று கேட்கச் செய்தது. இரத்தம் வழிய வழியக் கசைகொண்டடித்த கல் நெஞ்சரின் கைக்கசையின் முழக்கம், ஏழையின் அபயக் குரலை அடக்கிவிட்ட அக்ரமத்தை அளவு கடந்து அனுபவித்ததால் ஏற்பட்ட அதிர்ச்சியால் செல்வச் செருக்கரைச் சமர்க்களத்தில் சந்திக்கச் சங்கநாதம் செய்யவைத்தது சாதாரண மக்களையும் அந்தச் சிறைச்சாலை.

மாடியில் மதியில்லா மந்திரியும், அறிவில்லா அரசனும், ஆராய்ச்சி அனுபவம், அரசியல் நேர்மை எள்ளளவேனும் இல்லாத தலையாட்டிகளும், இருந்தும் இரும்புச் சிலைபோல் வாயைத் திறக்காதிருந்த வயோதிகப் பிண்டங்களும், மக்கள் புரட்சியை

அடக்குவதெப்படி? என்ற புதிய, ஆனால் உருப்படாத உதவாக்கரைத் திட்டத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றனர்.

வெளியே வேதனைக் குரல். மாளிகையின் பக்கத்திலேயே மருந்துக்கிடங்கு தீப்பற்றி வெடிப்பதைப் போல அனுதாபமுள்ள ஒருவன் அபாயத்தை விளக்க ஓடோடி வருகின்றான். வந்த ஆள் வாய் திறப்பதற்குள், "என்ன கூச்சல்? என வெடித்த குரலோடு வினவெழுப்புகின்றான் வேந்தன். அது மனித நாய்களிடம் சாதாரணக் கூச்சல் என்கிறான் பக்கத்திலிருக்கும் சீமான்." அப்படியானால் அந்தச் சாளரக் கதவுகளை மூடு, சத்தங் கேட்காது என்கிறான் கொற்றன். அவைகளை மூடுவதால் சத்தங் கேட்காமலிருக்கலாம். ஆனால் நாளை செங்கோல் தங்கள் கையில் தங்கவேண்டுமே என்கிறான் பச்சாதாபமுள்ளவன், பணிவான குரலோடு. அப்படியானால், அதோ 'பாஸ்டில்' என்ற ஓரே பதில் என்கிறான் வேந்தன். மீண்டும் திட்டம் தீட்டும் வேலையில் தீவிரமாக ஈடுபடுகின்றனர்.

பாவம்! அவன் அறியான், அந்தக் குரலில் வேதனை, வறுமை, நோய், மயக்கம், பசி, தாகம், பஞ்சம் ஆகிய அவ்வளவும் கலந்திருக்கின்றன வென்று. ஆகையால் பரிகசித்தான். ஜனத் தொகையில் பாதித் தன் தாள் பணியும் என்றெண்ணினானேயன்றி உலகநீதி அவன் உடலை இருகூறாக்கும் என்று எண்ணவே மறந்து விட்டான்.

கவசப் படைகள், கனல்கக்கும் பீரங்கிகள் ஆயுதமேந்திய குதிரை வீரர்கள், காலாட்படைகள், சட்டம், அதன் சொரூபத்தைக் குடைபோல் விரித்துக் காட்டச் சட்ட நிபுணர்கள். யாராலும் தகர்த்தெறிய முடியாத 'பாஸ்டில்' என்ற உலகத்திலேயே பெயர்போன பயங்கரச் சிறையாகிய இவ்வளவுமே தன் பரிவாரங்களென நினைத்தான். பரிகாபத்துக்குரிய பார்த்திபன்.

'பாஸ்டில்' என்ற உடனே அகில ஐரோப்பாவுக்கும் குலைநடுங்கும். விளையாடும் சிறுவர்கள் உள்ளமும் ஒடுங்கும். சுதந்திரத் தந்தை ரூஸோவையும், புரட்சியின் கர்த்தாவும், பேனா வீரனுமான வால்டேரையும் அடைத்து வைத்திருந்த அபாயச் சிறை புண்ணியம் தேடும் கிருஸ்தவர்கள் ரோமாபுரிக்கும், முஸ்லீம்கள் மெக்காவுக்கும், இந்துக்கள் இராமேஸ்வரத்துக்கும், புத்த பிட்சுக்கள் கயாவுக்கும் போவதைப்போல, பிரான்சில் சுதந்திரப் பிரியர்கள் யாராயிருப்பினும் பாஸ்டிலுக்குப் போய்த்தான் தீரவேண்டும் — முன்னவர் ஆன்மார்த்திகத்தால், பின்னவர், அரசியலாரின் அதிகாரத்தால.

அங்கு ஒருதரம் சென்றுவந்தவன் மீண்டும் தான் விட்ட இடத்தைத் தேடுவானா என்பதும் சந்தேகந்தான். அவ்வளவு பயங்கரமான, யாராலும் தப்பித்துக்கொள்ள முடியாத, இருதயமே இல்லாத அதிகாரிகளால் காப்பாற்றப்பட்ட சிறை அது.

"பாவத்தின் விதை" எனப் பல்லோரால் பரிகசிக்கப் பட்ட இடம் அது. அதனுள் போய்த் தண்டனையை அடைந்துவிட்டு வெளியே வந்தவன் மனிதனு, என்று பலர் பரிகசிக்கத்தக்க நிலையில் பாதகர்கள் ஒன்று சேர்ந்து அவர்கள் ஆடம்பர வாழ்க்கை என்ற எஃகுவால், கடின மனமென்ற கற்களால், சுயநலமென்ற சுண்ணாம்பால், ஏளனப் பார்வை இருமாப்பு என்ற இரும்பு உத்திரங்களால் கட்டப் பட்டது பாஸ்டில் சிறை.

அது அநேகர் உதிரத்தை உறிஞ்சி உயிரைக் குடித்த சவக்கிடங்கு. வாலிபப் பருவத்தில் முறுக்கு மீசையோடு உள்ளே சென்று வயோதிக ஞய் வளைந்த முதுகோடு அடையாளம் தெரிந்து கொள்ள முடியாமலே அனேகர் வெளியே வந்த துண்டு. இருக்கும் இடத்திலிருந்து இன்னும் ஒரு அடியும் நகர முடியாதென்று தெரிந்தபிறகே, அவ்வண்ணம் இருந்த அநேகர் விடுதலை யடைந்திருக்கின்றனர்.

வெளியே வந்தவர்களுக்குக் கிடைக்கவேண் டிய பொருள் ஒன்றே ஒன்றுதான் மிகுதியாக இருக்கும். அதுதான் அவனுக்காக அந்த நாட்டு அரசாங்கம் பத்திரமாகக் காப்பாற்றி வைத்திருக் கும், உடல் விடுதலை (மரணம்). அந்த நிலையில் மூச்சை மாத்திரம் அவன் உடலில் வைத்து வெளியே தூக்கி எறிந்தனர் பலரைச் சிறை யதிகாரிகள். கொடுமை கோரத்தாண்டவம் புரிய நாட்டாண்மை நடனம்புரிந்தது.

ரகசியக் கூட்டங்கள் பலவிடங்களிலே நடக்கும். அதன் முடிவாக, 'உரிமை' என்ற முழக்கம் ஒரு பககம் கேட்கும். "ராஜத் துரோகம்", என்ற பதில் வரும் ஒரு பக்கம். 'உரிமை என்று முழங்குவது ராஜத் துரோகமானால், உரிமை என்ற வார்த்தை அகராதியிலேயே இருக்க வேண்டியதில்லையல்லவா? உழைப்பு உறிஞ்சப்பட்டு, வாழ்வு வறண்ட பாலைவனமாக்கப்படும்போது, உரிமை, உரிமை என்ற வேதனைக் குரல் கேட்கின்றது.

இந்த வேதனை உள்ளங்கள் உறுமிய உறுமலால் பிரான்சு நாடே அதிர்ந்து கொடுத்தது. பண மூட்டைகள் மத்தியிலே பரபரப்பும், செல்வர்கள் வீட்டிலே சோகப் பார்வையும் முதலில், பிறகு செருக்கு, அதிகாரிகள் வீட்டிலே அதட்டல், ஆணவ நடை அளவு கடந்த மமதை, தங்களைக் காப்பாற்ற எங்கும் நிறைந்ததாய், ஏகபராபரமாய் உள்ள பாஸ்டில் சிறை, பயமில்லை என்ற ஆறுதல். பிரான்சின் மத்தியிலே இச் சிறையிருந்தது. கல்லர்கள் கண்களில் ஒரு வழிப்போக்கன் அகப்பட்டதைப்போல, காழுகர் மத்தியிலே ஒரு கட்டழகி இருந்ததைப் போல தேனீக்கள் மத்தியிலே ஒரு தேன்கூடு இருந்ததைப் போல, கூட்டின் மத்தியிலே ஒரு சிலந்தி இருந்ததைப் போல இருந்தது இந்த பாஸ்டில் சிறை செல்வர்களுக்கு ஓர் பாதுகாப்பாய்.

பரிதாபம்! சிறைச்சாலை என்ன செய்யும்? நிரபராதிகளையும் குற்றவாளிகளையும் அடைத்து வைத்திருப்பதால் சிறைச்சாலை என்கிறோம். அங்கே நீதி

வழங்கப்படுமானல், நீதி மன்றம் என்போம். அறிவு போதிக்கப்படுமானல், அற மன்றம் என்போம். கல்வி போதிக்கப்படுமானல் கலாசாலை என்போம். பாரான்வோர் இருக்குமிடமானல் பாராளு மன்றம் என்போம். கற்சிலைகள் வைக்கப்பட்டிருந்தால் கடவுள் எழுந்தருளிய கோயில் என்போம். எதையும் பயன் படுத்துபவன் குற்றமே தவிர பொருளின் குற்ற மல்ல. ஆகவே எந்தப் பழியும் அந்தச் சிறைச் சாலையைச் சாராது. ஆனல், அந்தச் சிறைச்சாலை யின் மூலம் சுய உரிமை தேவை என்று கெஞ்சிக் கேட்ட சமூகத்தின் குரல்வளையை நெரித்து நெஞ் சைப் பிளப்போம் என்று எக்காளமிட்ட ஏமாளி கள் குற்றம். அவர்கள் துணையை உண்மையென நம்பி உழைப்பாளிகளை உதாசினம் செய்து தனது அகங்காரத்தால் பிரான்சு மக்களை வழுச்சண்டைக் கிழுத்த மன்னன் லூயியின் குற்றம் அரசாங்கத் தின் அபாய ஏற்பாட்டிற்கு, ‘ஆம், ஆம்’ என்று தாபம் போட்டுத் தூக்கிவிட்ட துடுக்கர்கள் குற்றம் மக்கள் கண்ணீரைக் கண்டு கலங்காது, அவர்கள் உடலின் செந்நீரைக் கண்டு கலங்காது, அவர்கள் உடலின் செந்நீரைப் பொங்கும் கடல் வெள்ளம் போல் கண்ட கயவர்களின் குற்றம். இருட் குகை யாக இருந்த நாட்டை அருட்சோலையாக்கிய சீர் திருத்தச் செம்மல்களைப் பெற்றெடுத்தது பிரான்சு. பாரிஸ் என்ருல் அழகு, அழகு என்ருல் பாரிஸ் எனு மளவுக்கு ஒன்றையொன்று பின்னிக்கொண்டிருக் கும் அழகு நகரைத் தன் அணியாகக் கொண்டது பிரான்சு. ஏழையின் உள்ளத்தைப் படம் பிடித்

துக் காட்டிய விக்டர்யூகோ, தருக்கரின் செருக்கைத் தவிடு பொடியாக்கிய ராகின் போன்ற கவிகளை, இரண்டாயிரம் பேரோடு போய் மன்னன் மாளிகையை முற்றுகையிட்ட ராஸ்பெய்ல் போன்ற புரட்சி வீரர்களைப் பெற்றெடுத்தது பிரான்சு. உலகத்தையே வெறுக்குமளவுக்கு மனவலிமை கொண்ட ஞானிகளை, தத்துவப் பேராசிரியர்களை, மதபோதகர்களை, மாயாவாதம் பேசுபவர்களை, துடுப்பால் தள்ளப்பட்ட தோணி அசைவதைப் போல் தன் மெல்லிய கரங்களால் தடவி, அவர்களின் வைராக்கிய சித்தத்தைச் சிதற அடித்த உல்லாசிகள் நடமாடிய இடம் பிரான்சு.

உலக நடனச்சாலை, கன்னியரின் காமக் கோட்டம், வேந்தர்களின் உல்லாசபுரி, விருந்தினரின் மணிமாடம் வேற்றாரின் வேடிக்கை மண்டபம், ஆகிய இவ்வளவு ஆடம்பரங்களுக்கிடையே, மக்களைக் கொன்று குவிக்கும் மயானக்காடாய் இருந்தது. ஒரு பாஸ்டில்.

பாஸ்டில் என்றவுடனே ஓராயிரவர் ஈட்டியால் ஓயாது குத்த, தவறி ஓடினால் தாண்டமுடியாத பள்ளம். தட்டி விழுந்தாலும் தண்ணீர். நீந்துவோம் என்றால் சுற்றிலும் முதலைகள். கரையிலோ கரும்பாம்பு. அண்ணாந்து பார்த்தால் நெருப்பு மழை. உள்ளே மூழ்கினால் வெறும் சேறு. இதற்கிடையில் அகப்பட்ட மனிதன் உள்ளம் எப்படி இருக்குமோ, அதைக் காட்டிலும் நமது கற்

பனைக்கே எட்டாத சோகமிக்க சிறைச்சாலையை எளிதாக்கினன் வால்டேர். ஏளனம் செய்தான் ரூஸோ. எழுத்து ஈட்டிகளால் தாக்கினன் யூகோ. வீணையின் நரம்புகளைத் தடவி சமூகத்தின் நரம்புகளை இரும்பாக்கினன் ராகின்.

இங்கே தான் பாஸ்டில் இருந்தது ஒரு காலத்தில் என்று சொல்லுமளவுக்கு இடித்துத் தூளாக்கித் தரைமட்டமாக்கி அதன் மண்ணைத் தண்ணீரில் கலக்கினர்கள். அதிலும் வேடிக்கை அப்படிச் சொன்ன அறிஞன் வால்டேர் இறந்த பதினன்கு ஆண்டுகட்கு பிறகு, அவ்வளவு போர் நடத்திய பிரான்சு தன் நாட்டை அடிமை கொண்டிருப்பதை எண்ணவே வெட்கப்பட்டான் மாஜினி.

ஜெர்மனி

பிரான்சே அப்படி என்றால், ஜெர்மனியைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? அநேக பல சாயன நிபுணர்கள் தோன்றிய, இடம். பொதுவுடமைத் தந்தையும் மண்பொது விலையைச் சிந்தித்தந்த பெரியோனுமான கார்ல்மார்க்ஸ் பிறந்த ஜெர்மனி, வறுமை வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்ட வையகத்திற்குப், பஞ்சத்தால் மூழ்கிப்போன பாருக்குத், தொல்லையால் சோர்ந்துபோன தரணிக்கு நல்லதோர் அரசியல், பொருளாதார சமுதாய இயலை இயம்பி, இன்னலுற்ற மக்களை இன்புற வைக்கும் தனிமான்பு, தனிச்சிறப்பு, தனிப்பீடு ஜெர்மன் கார்ல் மார்க்சுக்கே உரியது. அவர் அக்

காலத்து உயர்ந்து ஓங்கிய பகுத்தறிவியலைப் பருகி முன்னேற்றவாதியாக விளங்கினார். அவர்காலத்து ஆங்கில நாட்டில் நல்ல தனியறிவுடையவரெனத் திகழ்ந்த ஏஞ்சில்ஸ்சின் நட்புப் பெற்றமையாலும், ராபர்ட் ஓவனால் தோற்றுவிக்கப்பட்ட ஆங்கில சோஷியலிஸ்டு இயக்கத்தாலும் மார்க்ஸ் அவர்கள், தங்கள் பொருளாதாரத் திட்டத்தைப் பெரிதும் பெருக்கினார். இதுதான் மார்க்கசீயத்தின் இயல். இவரின் திரண்ட ஆராய்ச்சி, இவர் காலத்திலிருந்த ஏகலின் அளவைப்பொருளியலைப் (Dialectical materialism) அடிப்படையாகக் கொண்டது. அதாவது உடன்பாட்டையும், எதிர்மறையையும் தோற்றுவித்துக் கடைசியில் அழியும் நிலை எய்துவதே மேற்படி கொள்கை.

சமுதாய அரசியலின் குறிக்கோள் பொருளாதாரம் என்ற பேருண்மையை உரைத்த தனிச் சிறப்பு காரல்மார்க்சுக்கே உரியது. ஒன்றின் மதிப்பு உழைப்புப் பற்றியதென்ற உண்மையைப் பகர்ந்த பெருமை காரல்மார்க்சுக்கே உரியதாகும். முப்பது ஆண்டுகளாக உழைத்து ஆராய்ந்து, புதிய நடைமுறைக்குரிய, என்றும் ஏற்கவல்ல, சிறந்த சமூக அமைப்பு முறையை அவனிக்களித்த பெருந்தகை பிறந்த நாடு, தன் நாட்டைத் தலை குனியவைப்பதை எண்ணி மனம் கசிந்தான் மாஜினி.

அதுமாத்திரமல்ல பேரறிஞர் நியூடன் திண்பொருள் ஆராய்ச்சிக்கும் தகவுடைய டார்வின் மனிதன் தோற்ற ஆராய்ச்சிக்கும் அரண் செய்தது. நலிந்து

குலைந்து, சிதைந்த மக்களினத்திற்குப் புதியதோர் சக்தியை அளித்தது. இவர் தம் ஆராய்ச்சியால் சமூகம் உயர்வதற்குரிய காரணம் உலகம் கண்டது. சமூக நிலையையும், பொருளாதாரத்தின் நிலையையும் அளந்தறிய மார்க்கசீயம் உதவுகிறது. ஓரிடத்தில் செல்வம் திரண்டும், மற்றோரிடத்தில் வறுமைதிரண்டும் விளங்குவதற்குரிய ரகசியத்தை விளக்கமாகத் தெரிவிப்பது மார்க்கசீயந்தான். பாரில் தோன்றும் பல்லுயிர் பசியற்று வாழ வேலையளித்து, உணவளித்து, உடையளித்து, வீடளித்து உயர்வுற வைக்கும் மாண்புடைக்கொள்கையை மண்ணுலகிற்கு வழங்கி, மூலதனம், என்ற உயரியநூலை உலகிற்களித்த உத்தமன் பிறந்த நாடு தன் நாட்டை நடைப்பிணமாக்குவதைச் சொல்லிச் சொல்லிச் சோகமுற்றான்.

பல்லாண்டு உழைத்துப் பலதிட்டங்களை வகுத்து அவர் மறைந்த பின்னரும் 18 கோடி மக்கள் உல்லாச வாழ்வு வாழவைத்த சிந்தனையாளன் தோன்றிய தாயகம் தன் தாயகத்தைத் தரைமட்டமாக்குவதை எண்ணித் தளர்ந்து போனான். கெத்தே போன்ற கவிகள் பிறந்த பொன்னாடு. பிஸ்மார்க் போன்ற பிற்போக்கு வாதிகள் பிறந்த நாடு, யூதர்களைக் கொழுக்க வைத்த இடம், பொய்யர் சங்கம் அமைத்து, மெய்யைத் திணறவைத்த நாடு ஜெர்மனி. பொய்யை மெய்யாக்கும் புனிதப் பணியில் ஈடுபட்ட நாசீச இயக்கம் தோன்றிய ஜெர்மனி, வான் ஹிண்டன் பர்க் போன்ற வல்லவர்கள் தோன்றிய

ஜெர்மனி, இரத்த வெறி பிடிப்பதிலும் தன் நாட்டை நலிய வைப்பதிலும் ஆச்சரியமில்லை என்று எண்ணி ஆறுதலடைந்தான் மாஜினி.

## ஆஸ்டிரியா

நெப்போலியன் நீதி வழங்க வீற்றிருக்கிறான். நீதி வழங்க என்பதற்குப் பதில் பழிவாங்க என்றால் பொருந்தும். கூண்டிலே ஏற்றப்பட்டான் குற்றவாளி எனக் கருதப்பட்ட நூரம்பர்க் புத்தக வியாபாரி ஜோஹென்ஸ் பிலிப்பாம்.

## குற்றம்

ஜெர்மன் ஆஸ்டிரியாவுக்கு நெப்போலியனால் அடிமையாக்கப்பட்ட பிறகு, அந்த அவமானத்தை சகிக்காத நூரம்பர்க் ஆசிரியன் ஒருவன் "ஜெர்மனியின் சகிக்க முடியாத அவமானம்" என்ற தலைப்பில் துண்டு அறிக்கை ஒன்றை அச்சடித்து வெளியிடத் தூண்டினான். அதைத் தெருக்களிலே வழங்கியவன்தான் மேலே சொன்ன நூரம்பர்க் புத்தக வியாபாரி ஜோஹென்ஸ் பிலிப்பாம் என்ற குற்றவாளி. ஆனால் இது தன் வீரத்தைக் கேலி செய்வதாக நினைத்துக் கொதித்தெழுந்த நெப்போலியன் மேற்படி குற்றவாளியைக் கூண்டில் ஏற்றி விசாரிக்கின்றான்.

நெப் : நீதான் இந்தத் துண்டு அறிக்கையை வழங்கினையா?

ஜோ : ஆமாம்.

நெப் : அதில் கண்டிருக்கின்ற ஜெர்மனியின் சகிக்க முடியாத அவமானம் என்ற வாசகத்துக்கு நீர் கொள்ளும் கருத்தென்ன ?

ஜோ : உங்கள் வீரத்தைப் பழிப்பதாய் நீங்கள் எண்ணுவது தவறு. எங்கள் நாட்டாரின் கோழைத்தனத்தைக் குத்திக்காட்டுகிறோம்.

நெப் : உங்கள் ஜெர்மன் நாட்டார் வீரர்களென்று நீங்கள் எண்ணுகிறீரா ?

ஜோ : ஒரு தரத்தார் எப்போதும் வீரர்களாக வாழ முடியாது. ஆனால் எல்லோரும் எப்போதும் மனிதர்களாக வாழ முடியும்.

நெப் : அதற்கு நீர் வகுத்திருக்கும் திட்டமென்ன?

ஜோ. அது தனி மனிதன் திட்டத்தால் ஆகாது.

ஆனால், உலக மக்கள் அனைவருமே ஆயுத மெடுக்காப் பண்பு, இரத்தஞ் சிந்தா உணர்ச்சியை மேற்கொள்ள வேண்டும்.

நெப் : எனக்கு மறைமுகமாகப் புத்தி கற்பிக்கிறீரா!

ஜோ : மன்னிக்கவேண்டும் தாங்கள் அப்படி நினைக்க உரிமையுண்டு. ஆனால் அதே நேரத்தில் நான் நினைத்ததை சொல்லும் உரிமையும் எனக்குண்டு என்பதைத் தயவுசெய்து தாங்கள் மறந்துவிடக்கூடாது.

நெப்: அதிகப்பிரசங்கி, வாயை மூடு. இதை யார் எழுதியது ?

ஜோ: நான் தான் எழுதினேன்.

நெப்: நீ எழுதவில்லை என்பது மட்டிலும் எனக்குத் தெரியும்.

ஜோ: அப்படியானால் எழுதியவர்களையும் தாங்கள் தெரிந்து கொண்டிருக்க வேண்டுமே ?

நெப்: உஷ். சொல்கிறாயா, இல்லையா ?

ஜோ: சொல்லாவிட்டால் ?

நெப்: கொல்வேன்.

ஜோ: எழுதியவன் யார் என்று சொன்னால் அவனைக் கொல்வீர்கள். இல்லையானால் என்னைக் கொல்வீர்கள். இரண்டும் ஒன்றுதான். ஜெர்மன் நாட்டான் ஒருவனை ஒருவன் காட்டிக் கொடுப்பதில்லை.

●

மறுகணமே பிணமானான் ஜோஹென்ஸ்பிலிப்பாம். இந்தக் கைங்கரியத்தைச் செய்து முடித்தான் நெப்போலியன்.

(அந்த உறுதியான உள்ளம்படைத்த ஜோஹன்ஸ் பிலிப்பாம நல்லறைதான ஹிட்லர் பிறந்த வீட்டுக்கருகாமையிலிருந்தது)

இவ்வளவு கொடுமைகளையிழைத்த ஆஸ்ட்ரியாவா தன் நாட்டின்பால் அனுதாபம் கொள்ளப் போகிறது? நடப்பது நடக்கட்டும் என முடிவு செய்தான் மாஜினி.

சிந்தனைச்செயலின் வித்தல்லவா? சிந்தனையைக் காட்டிலும் செயலே பெரிதென்பர் பல்லோர். அந்தத் தத்துவத்தை அவன் உள்ளம் வாங்க மறுத்தது. சிந்தனையில்லையானால் செயல் எப்படித் தோன்றும்? ஆகவே சிந்தித்தான். மேலும் மேலும் சிந்தித்தான். மேகத்தில் மறைந்த முழுமதி திடீரென வெளித்தோன்றுவதுபோல் ஓர் எண்ணம் உதயமாயிற்று. அதுதான் மாஜினி கண்ட இளைஞர் இயக்கம். இளைஞரைக்கொண்டு எதையும் சாதித்துவிட முடியும் என்று அவன் உறுதியாக நம்பினான். ஏன்? இளைஞர்கள் வருங்காலச் சிற்பிகள். குடும்பக் கவலை யறியாதவர்கள். வெள்ளையுள்ளத்தினர். அதே நேரத்தில் வன்மை மிக்க உள்ளம் படைத்தவர்கள். செயலில் முடிவென்ன என்பதைப்பற்றிக் கவலைப்படாமல் செயலின் தொடக்கமுதல் முடிவுவரை துள்ளிக் குதிக்கும் காளைகள். நட்பில் கொடிபோன்றவர்கள். இளவயதின் காரணத்தால் கைதட்டியவுடன் ஒன்று திரளும் ஆற்றல் பெற்றோர்கள். பயமறியாக் காளைகள். அவர்கள் எண்ணத்துடிப்பை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று உறுதியாக நம்பினான் மாஜினி. எனவே இத்தாலிய இளைஞர் இயக்கத்தை நிறுவினான். அதன்

கருத்துகள் காட்டுத் தீப்போல் பரவின. எங்கும் உணர்ச்சி வெள்ளம பாய்ந்தது. இதாலியில் சுதந்திர சூரியன் தோன்றிவிட்டான். பிறகு ஒரு கொரில்லா படையைத் திரட்டி அரசாங்கத்தைக் கைப்பற்ற முடிவு செய்துவிட்டான்.

## படைதிரட்டிப் பேசுகிருன்

"பெரியோர்களே! இத்தாலியின் இருதயம் போன்ற இளைஞர்களே! உயிரைக் காணிக்கையாக அளிக்க முன்வந்த உத்தமர்களே! உங்களனை வர்க்கும் வணக்கம். இத்தாலிய இளைஞர் இயக்கம் வாய்ப்பேச்சால் போரிட, கொரில்லாப் படைகள் வாள்வீச்சால் போரிட, அமைத்து விட்டோம். இனி, எதிரிகள் நமக்குத் தூசி. சொந்த நாட்டின் பெருமையை வந்தவனுக்கு வாழ்வாக அளித்து இங்கிருந்தவன் இடர்ப்பட்டு வாழ எவன் கட்டளையிட்டிருந்தாலும் ஏற்கமாட்டோம். இரும்பை இரும்பால் அடித்து வளைப்பதுதான் நமது நோக்கம். அயல் நாட்டார் நம நாட்டில் நண்பர்களாக வாழலாம். ஆமோதிக்கிறோம். ஆதரவு தருகிறோம். ஆனல் நாட்டாண்மை கொண்டிருக்கும் யாரையும் இனி விட்டுவைப்பதாயில்லை. இதாலியின் கடைசி ஜீவநாடி முறிகிறது. இங்கே பிறந்தவன் எங்கோ இருந்தவனுக்கு இங்கிதமாக நடந்துகொள்ள வேண்டுமென்ற சங்கதியை ஒரு நாளும் நாம் சகிக்கப்போவதில்லை நாம் யாரிடமும் பிச்சையோ சன்மானமோ கேட்கவில்லை.

நமது நாட்டை நம்மிடம் ஒப்படைக்கும்படி வாள் முனையில் கேட்கிறோம். இதற்குப் பெயர் துரோகம் என்றாலும், சதி என்றாலும், புரட்சி என்றாலும் சகித்துக்கொள்ளத் தயாராயிருக்கின்றோம். பல நாட்கள் அடிமையாய் வாழ்வதைவிட ஒரு நாள் வீரனாக வாழ்ந்து உயிர்விட வேண்டும்"

(கைதட்டல்)

என் மனம் என்னைச் செயல் புரியத் தூண்டுகிறது. இத்தாலிய நாடும், இளைஞர் இயக்கமும் அதையே உங்களைச் செய்ய அழைக்கிறது. பல நன்மைகள் கெட்ட காரியத்திலேயே ஆரம்பிக்கின்றன என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. ஆக்க வேலைக்கு முன் அழிவு வேலை. இப்போது நாம் மேற்கொள்ளப்போவது அழிவு வேலை. இதற்கடுத்த படிதான் ஆக்கம். அது உங்கள் உழைப்பைக் கேட்கலாம். சதையைக் கேட்கலாம். உங்கள் பணத்தைக் கேட்கலாம். ஏன்? இறுதியாக உங்கள் உயிரையே கேட்கலாம். எவ்விதமான ஊதியமும் எதிர்பாராமல் இதில் ஈடுபடுங்கள். நீங்கள் சிந்தும் ஒவ்வோர் இரத்தத் துளியும், உங்கள் வருங்கால சந்ததிகள் செழித்தோங்கி வளர. நீங்கள் போராடிப் பெறும் ஒவ்வோர் அங்குல நிலமும் நமது வருங்கால சந்ததிகள் சுதந்திரமாகத் திரிய. காலங்கடவா முன்னம் கடமையைச் செய்ய முன் வாருங்கள். ரோம், மிலான், நேபிள்ஸ் என்ற நமது தாயகங்களின் சிக

ரத்தில் நமது சுதந்திரக்கொடி பறக்க வேண்டும். அயல் நாட்டார் கொடி அகற்றப்பட வேண்டும். நம்மை எவ்வளவு மதியீனர்கள் என்று நினைத்திருந்தால், எவ்வளவு பலஹீனர்கள் என்று நினைத்திருந்தால், அயல்நாட்டார் இங்கே ஆதிக்கம் கொள்ள முடியும்? அகிலஉலகாயுதம் பேசுகின்றனர் மடையர்கள். அகிலஉலக மக்களும் ஒரே நாகரிகம் ஒரே பண்பு, ஒரே பழக்க வழக்கம், ஒரேமொழி, என்ற முறையில் ஒன்றுகட்டும், நாமும் ஒன்று வோம். 20ப கோடி மக்கள் 92 அரசுகளாகப் பிரிந்திருக்கும் போது நாம் ஏன் பிரிந்திருக்கக் கூடாது. மற்றவரை அடிமைப்படுத்தும்போது ஆன்மார்த்திகத்துறையிலே ஒற்றுமை பேசுவது, மற்றவருக்கு அடிமைப்பட்டிருக்கும்போது அரசியல் துறையிலே புரட்சி நடத்துவது போன்ற நிலையை இன்னும் வளரவிடக்கூடாது அதிகம்பேச நேரமில்லை. ஒற்றர்கள்வருவார்கள். இந்நேரம் மாளிகைக்குச் செய்தி எட்டிருக்கும். இதுவரை சொன்னதை நினைவில்வைத்து நடந்துகொண்டு இதாலியின் விடுதலைக்காகப் போரிடவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்" என்று சொல்லி முடித்தான்.

## அடக்குமுறை

இந்நாலி திடீரென்று தீப்பற்றி எரிந்ததைப் போல ஒருபக்கம் மிலான் சர்க்கார், மற்றொரு பக்கம் ரோம் சர்க்கார் இன்னொரு பக்கம் நேபிள்ஸ் சர்க்கார் கொதித்தெழுந்தன. பொதுக்கூட்டம் அதி

னும் ஆவேசக் கண்டனம்; "குறிப்பாக நம்மை போப்பாண்டவரே நம்மைக் கைகுலுக்கி உள்ளே அனுமதித்தார். இதைப் பொல்லாத போக்கிரிப் பயல் யார் நம்மைக் கண்டிக்க? நெடுநாள் தூங்கி விட்டோம். துஷ்டர்களைக் கண்டுபிடித்துத் தூக்கி லேற்றியிருந்தால் இந்தத் துடுக்குத்தனம் பரவி யிருக்காது! யாரோ ஒரு சிறுவன், படித்துப் பட்டம் பெற்றவன், வேலை கிடைக்காத காரணத்தால் உறுமுகிறான். நமது வல்லமை மிக்க அரசாங்க அணிவகுப்புக்கு முன் அவன் எம்மாத்திரம்? பயம் வேண்டாம்" இப்படிக் கூறுகிறான் ஒரு சந்தர்ப்ப வாதி. "இல்லை, இல்லை, அவனை அடக்கியே தீர வேண்டும். இல்லையானால் மன்னர், மன்னர்பரம் பரை, மகுடம், சிங்காதனம் அவ்வளவும் செல்லரித்துப்போக வேண்டியதுதான்." இப்படிக்கதறு கிறான் ஒரு பயங்காளி. மாளிகையில் ஒரே அமளி. ரோமிலிருந்து நேபிள்சுக்கும், நேபிள்ஸிலிருந்து மிலானுக்குமாகத் தூதுவர்கள் மாறி, மாறி ஓடிக் கொண்டிருக்கின்றனர். சிறு உளி என்று விட்டு வைக்கக்கூடாது. அது மலையைக் கல்லிவிடும். சிறு நெருப்பென்று அயர்ந்திருக்கக்கூடாது. அது நாட்டைச் சாம்பலாக்கிவிடும். சிறுதுளி என்று பாராமுகமா யிருக்கக்கூடாது. அது ஒரு பெருவெள்ளமாய் எங்கும் அழிவை உண்டாக்கிவிடும். சிறிய பாம்பு என்று விட்டுவைக்கக்கூடாது. அதன் விஷம் கொடியது. கண்டவுடன் கொல்லுங்கள். இதுவரை தோன்றாத எதிர்ப்பு இப்போது தோன்றியிருக்கின்றது.

முளையிலே கிள்ளி எறியுங்கள். செடியாய், மரமாய், பூத்துக் காய்த்துக் கனிய விடாதீர்கள். பகையைப் பகையால் வெல்லுங்கள்" இப்படிப் பேசுகின்றனர் மாளிகையிலிருந்த மந்தகாச வாழ்வினர். அவர்களுக்கு ஓர் இறுதிச்சடங்கு. ஈமக்கிரியை. மக்கள் மன்றத்தில் கடைசிவிசாரணை. இப்படி வெளியே கூடியிருந்த மக்களில் பேச்சு. "இத்தாலிய இளைஞர் இயக்கம்!" இத்தாலிய இளைஞர் இயக்கம்! என்ன இறுமாப்பு!, எனப் பெருமூச்சு விடுகின்றன அந்தப் பேராசைகொண்ட மூவல்லரசுகள். சுதந்திர ஆர்வத்தின் மேல் சதுரங்க விளையாட்டுக்காய் எப்படி நகருமோ யார் கண்டார்கள்? எப்படியும் நமக்கு இது ஒரு தலைவிதிதான். பகலில் பாண்டு வாத்தியங்கள், இரவில் பறவையின் கானங்கள். இது தவிர நாம் இதுவரை வேறொன்றையும் கேட்டறியோம். மெல்லியர் கரங்கள் நம்மைத் தீண்டியது தவிர வேறு யாரும் நம்மைத் தீண்டத்தகாதவர்கள். ஏதோ சிலபல நேரங்களில் மதுபானத்தின் அளவு அதிகமாய் விட்டபோது பஞ்சணையில் சாய்ந்தது தவிர, மற்ற எவனுக்கும் தலை சாய்த்திருக்க மாட்டோம். பலர் நம்காலடியில் விழுந்து பணிந்ததல்லாமல் நாம் யாருடைய காலிலும் விழுந்து பணிந்ததில்லை. கொண்டுவாருங்கள் அந்தக் கோடரிக்காம்பை. மரணக்குழி வெட்டுங்கள் அந்த மடையன் மாஜினிக்கு, எனத் தங்கள் பழைய துருப்பிடித்த ஏகாதிபத்தியத் தொனியால் ஆணையிட்டார்கள் கால வெள்ளத்தைக் காணாத

கசடர்கள். மக்கள் அறியாமை, பேதமை, அடிமை புத்தி என்ற கவசத்தையணிந்த எலும்புருவங்கள் ஆர்ப்பரித்தார்கள், ஆணையிட்டார்கள், அச்சமூட்டினார்கள். ஆயினும் அந்த இளைஞன் மாஜினி அகப்படவே இல்லை. என்ன ஆச்சரியம்! நேற்று மாலை பொதுக்கூட்டத்தில் பேசினான். இரவு 10 மணிக்கு உத்திரவு பிறந்தது. இதற்குள் மாயமாய் மறைந்து விட்டான். யார், யார் கூட்டத்துக்குச் சென்றது? பள்ளி ஆசிரியர் கேட்கின்றார். பதில் இல்லை. யார் கூட்டத்துக்குத் தலைமை வகித்தது? வக்கீலை நீதிபதி கேட்கிறார். பதில், தெரியாது நகரத்தில் முக்கியமானவர்கள் யார் யார் சென்றிருந்தார்கள், மந்திரி கேட்கின்றார் தன் பணியாளனை. 'தெரியாது' பதில். எங்கு புலன் விசாரித்தாலும் சரியான தகவல் கிடைக்கவில்லை.

அப்போதாவது, இவ்வளவு சிறிய நாட்டில் மாஜினி ஒளிய இடந்தந்த மக்களின் மனநிலையை யறிந்தானா மன்னன்? எப்படித் தெரிய முடியும் இறுமாப்பென்ற இருள் கண்களைக் கௌவிக் கொண்டிருக்கின்றபோது? ஆயினும்எங்கும், மாஜினி எங்கே! எங்கே மாஜினி!! என்ற சுவரொட்டிகள். மக்களிடம், அரசாங்க அலுவலகத்தில், அறமன்றம், அங்காடி, அதிகார வர்க்கத்தார் வசிக்கும் இடம், எங்கும் எல்லா இடங்களிலும், 'மாஜினி எங்கே' என்ற பேச்சுதான். 'ஓடிவிட்டான் கோழை,' இது உளுத்தர்களின் கேலிச் சிரிப்புக் கலந்த பேச்சு. "திட்டம் தீட்டுகின்றான்," இது இலட்சியவாதிகளின் நம்பிக்கை. "ஏதோ காரணம் இருக்கும்." இது

சந்தேகப் பிராணிகளின் சஞ்சலம். "மிலானுக்கு மரணசாசனம், ரோமில் தீ, நேபிள்ஸுக்குத் தலைவலி," இப்படிப் பேசுகின்றனர் சுதந்திரப்பிரியர்கள். "நமக்கேனடா இந்தத் தொல்லை? லட்சத்தில் நாம் ஒன்று." இது பெற்றோர்கள், சுற்றத்தார், நண்பர்கள் வருத்தம். முன்னே மின்னல் இப்போது இடி, இறுதியில் மழை, இதுபோன்ற உரையாடல் நடந்தவண்ணமிருக்க நடையைக் கட்டிவிட்டான். சந்தேகப்பட்டவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். நாட்டுக்கு நாடு தாவியோடிக்கொண்டிருந்த தூதுவர்கள் கொரில்லாப் படைகளால் கொல்லப்பட்டனர்.

## நெப்போலியன் பிறப்பிடம்

இந்த உள்நாட்டு அமளியிலேயே ஒரு தீவை யடைந்துவிட்டான் மாஜினி. கடலில் மிதக்கும் பல தீவுகளைப்போன்றதல்ல அந்தத் தீவு. கண்டோர் குலைநடுங்க அகில ஐரோப்பாவையும், மற்றும் பல நாடுகளையும் தன் காலடியில் மிதித்த வீர நெப்போலியனை ஈன்றெடுத்த கார்சிகாத் தீவு ஆம். கார்சிகா என்றவுடன் குலைநடுக்கம்கொள்ளும் பல நாடுகள். பத்துக் கார்சிகாகாரர் சேர்ந்தாலும், ஒரு பிரான்சுக்காரனுக்கு இணையாகமாட்டான் என்று தன்னோடு படித்துக்கொண்டிருந்த மாணவர்கள் வேடிக்கையாகச் சொல்ல பத்துப் பிரான்சுக்காரர் சேர்ந்தாலும் ஒரு கார்சிகாத் தீவுக்காரனுக்கு இணையாகமாட்டான், வேண்டுமானல் பலப்

பரீட்சை நடத்திப் பார்த்துவிடலாம் என்று தான் படித்துக்கொண்டிருக்கும்போதே தன் கைகளை உயர்த்திச் சவால்விட்ட நெப்போலியன் பிறந்த கார்சிகா தீவு.

அங்கேதான் ஒளிந்துகொண்டான் மாஜினி. தனக்குக்கிடைத்த அந்த அருமையான ஓய்வு நேரத்தில் மீண்டும் நிறத்தின் ஆராய்ச்சியைவிட்ட இடத்திலிருந்து தொடங்க ஆரம்பித்தான். மாஜினி முன்பு ஆராயாமல்விட்ட நிறம் ஒன்று, அதுதான் கருப்பு. அதைப்பற்றித் தீரயோசித்தான். கருப்பு நிறம் துக்கத்தைக்காட்டுவதுமாத்திரமல்ல, செங்கதிரோன் வெப்பத்தை அப்படியே வாங்கிச் சூடில்லா உடலுக்குச் சூடேற்றும் நிறம். எவ்வளவு நிறங்களிலும் தெற்றெனை எடுத்துக் காட்டும் நிறம். ஏதோ ஒரு சிந்தனைக்கு உறைவிடம். சட்ட நிபுணர்கள், தர்க்கவாதிகள் விரும்பி உடுக்கும் நிறம். ஆகவே அந்த நிறச் சட்டையைத் தானும், தன் தொண்டர்படையும் அணிய வேண்டும் என்று முடிவுகட்டினன். ஆனல் அதை இயக்கத்தவர் எல்லாரும் அணியக்கூடாது. ஏனெனில், அது அரசியல் சம்பந்தப்பட்டகாகையால் அதை அணிந்துகொண்டு போகின்றபோது, எதிரிகளிடமிருந்து பல ரகசியங்கள் வெளியாகாமல் போகக்கூடும். ஆகவே ஒரு குறிப்பிட்ட நபர்கள் அடங்கிய தொண்டர்படை மட்டிலும் அணிந்தால் போதும். அந்தத் தொண்டர்படை. இயக்கத்தின் பாதுகாப்புக்காகத், தொண்டர்படை மட்டிலும் கட்

டாயம் அணியவேண்டும் மற்றவர்கள் விரும்பினால் அணியலாம். ஆனால் கட்டாயமில்லை. அணியாதவர்களைக் கள்ளமார்க்கட் காரர்கள், குள்ளநரிகள் என்று கண்டிக்கும் தலைவர்களும் அங்கில்லை. ஆகவே அன்றுமுதல் தான் விரும்பியபடியே செய்து முடித்தான். அன்று தோன்றியது கருஞ்சட்டைப் படை.

## மணி முடி மாற்றம்

இந்த நேரத்தில்தான், அதாவது 1821ல் கார்பனோர கொலைக்குற்றத்தில் சம்பந்தப்பட்ட சார்லஸ் ஆல்பர்ட் என்பவன், சார்லஸ் பெலிக்ஸ் என்பவனுடைய சார்டீனியன் சிங்காதனத்தை அலங்கரித்தான். இது மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்தது மாஜினிக்கு. ஏன்? சார்லஸ் ஆல்பர்ட் விடுதலைப்பிரியன். அவன் அலங்கரிக்கின்றான் சார்டீனியன் மணிமுடியை. வெற்றி நமதே என மனம் பூரித்தான். அந்தக் களிப்பின் பெருமிதத்தால் எழுதுகிறான் கடிதத்தை.

## அன்பு மடல்

அன்புள்ள ஆல்பர்ட்! வணக்கம். கொலைக்குற்றத்தால் குருதியைச் சிந்தியிருக்க வேண்டிய நீர் அரியாசனத்தை அலங்கரிக்கின்றீர். எதிர்பாரா வெற்றி. ஏமாற்றமில்லாத மகிழ்ச்சி. நீர் மன்னர் பரம்பரையல்ல. மக்கள் பரம்பரை என்பதை நான் தங்களுக்கு நினைவூட்டுவதற்காகப் பெரு

மைப்படுவீர்கள் என்று எண்ணுகிறேன். நாட்டின் எல்லைக்கோடுகளை விரிவுபடுத்துவதல்ல நமது குறிக்கோள். மக்களின் வாழ்க்கைக்கோடுகளை வரையறுக்க நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றோம் என்பதை நம்மில் யாரும் மறந்து புறக்கணிப்பதற்கில்லை அந்தப்பணியில் தீவிரமாகப் பங்கேற்றுக் கொண்டிருக்கும் எனக்கும் மக்களுக்கும் தங்களாலியன்ற எல்லா உதவியும் புரிவீர்கள் என்று நம்புகிறேன். அதில் தாங்கள் குறிப்பாகவும் உடனடியாகவும் செய்ய வேண்டியது, எங்கள் சுதந்திரத் தீயில் உங்கள் ஆதரவென்ற எண்ணெயையூற்றித் தீ அணையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது. வணக்கம்.

தங்கள் அன்புள்ள,

மாஜினி.

## மடலுக்கு மன்னன்

மார்சேல்ஸில் இந்தக் கடிதம் வெளியாயிற்று. கண்டிப்பாகத் தனக்குச் சாதகமான பதிலோ உதவியோ கிடைக்குமென எதிர்பார்த்தான் மாஜினி. ஆனால் அவனுக்குக் கிடைத்த உத்தரவு பெரிய ஏமாற்றத்தையும், அதிர்ச்சியையும் உண்டாக்கி விட்டது. இவன் நாடு கடக்கவேண்டும் என்பதுதான் அந்த உத்திரவு. தன் நண்பன், தன்னோடு தோள் தட்டி நின்ற நண்பன், கொலையாளியாக இருந்து இன்று கோமானாய் விட்டதால், பேராசை விஷம் தலைக்கேறி, அந்தக் கொடியவன் சார்டீனியன்

சிங்காதனத்தான் இட்ட கட்டளை இது. மாஜி னிக்கு மிகுந்த சோதனைக்காலம். எனினும் அவன் தளரவில்லை. அந்த இடத்தை விட்டு ஸ்விட்ஜர்லாந் துக்கு வந்து சேர்ந்து விட்டான்.

சார்லஸ் ஆல்பர்டுக்கும், மாஜினிக்கும் நடந்த கடிதப் போக்கு வரத்து, மாஜினி நாடு கடத்தப்பட்டது, ஆகிய நிகழ்ச்சிகள் சார்டீனியன் படைகளுள் ளேயே பெரும் பரபரப்பை உண்டாக்கிவிட்டது. அதனால் படைகளுக்குள்ளேயே குழப்பம். கை கலப்பு. அதன் முடிவு படை வீரர்கள் பலர் கொல் லப்பட்டனர். பலர் உயிரோடு குழிதோண்டிப் புதைக்கப்பட்டனர். பலர் படையை விட்டே ஓடி விட்டனர். சார்டீனியன் சர்க்கார் ஆட்டங்கண் டது. இவ்வளவுக்கும் காரணம் மாஜினிதான் என்று குற்றஞ் சாட்டப்பட்டு விசாரணை நடத்தப் படுகிறது.

## நீதி மன்றம்

குற்றவாளி மாஜினி - நீதிபதிகள்.

நீதி. இந்தக் கடிதம் நீர் எழுதியதுதானே?

மாஜி: ஆம்.

நீதி: சார்டீனிய அரசர், மேன்மை தங்கிய மன் னர், சார்லஸ் ஆல்பர்ட் அவர்களை மரியாதை யில்லாமல் 'அன்புள்ள' என்று குறிப்பிட் டிருக்கின்றீர்கள். அது ஒரு குற்றம்.

மாஜி : அதை நான் குற்றமாகக் கருதவில்லை. 'அன்புள்ள' என்ற வார்த்தையைவிட அதிகமான மதிப்புடைய வேறு வார்த்தை எதையும் நான் மதிக்கவில்லை.

நீதி . நீதி மன்றத்தை அவமதிக்கின்றீர்.

மாஜி : நீதிபதி அவர்களே! மன்னிக்க வேண்டும். இன்று சார்டீனியன் சிங்காசனத்தை அலங்கரிக்கும் சார்லஸ் ஆல்பர்டு சிறிது நாட்களுக்கு முன்பு கொலைக்குற்றம் செய்தவர். அப்போதும் அவரை நான் 'அன்புள்ள சார்லஸ்' என்றுதான் அழைத்தேன். அன்று அந்த என் அன்பான வார்த்தையை உங்களில் யாராவது கேட்டிருந்தால், அதுவும் குற்றமாகத்தான் தெரிந்திருக்கும். ஏனெனில், ஒரு கொலைகாரனை, நான், அன்புள்ள என்று அடைமொழி கொடுத்து அழைப்பதால், என் நடவடிக்கையிலும் சந்தேகப் பட்டிருப்பீர்கள். மேலும், இனி ஒரு காலத்தில் இந்த அரசாட்சியே அவருக்கு நிலைக்காமல் போய் மீண்டும் அவர் சாதாரண மனிதராய் விட்டால், அப்போதும், நான், 'அன்புள்ள சார்லஸ்' என்றுதான் அழைப்பேன். நிலைமைக்கேற்றமாதிரி சொற்களை மாற்றிக் கொள்வதைவிட, எப்போதும் அழைக்கத் தக்க நிரந்தரமான வார்த்தையைக் கையாண்டால் ஆபத்தில்லை என்று நான் முடிவு செய்தேன். அது மாத்திரமல்ல. ஜார் மன்னருக்குக் கடிதம் எழுதிய டால்ஸ்டாய் என்ற ருஷ்ய அறிஞரும், இப்படித்தான் அன்புள்ள நிக்கோ

லாஸ்! என்று எழுதியிருந்தார். அதற்காக அந்த நாடோ, மன்னரோ, அன்று அங்கிருந்த உங்களைப்போன்ற நீதிபதிகளோ, கோபிக்கவில்லை.

நீதிபதி: ஒரு அரசாங்கத்தைக் கவிழ்க்க, மற்றொரு அரசாங்கத்தைத் துணைக்கழைப்பது மன்னிக்க முடியாத குற்றம்.

மாலினி: மன்னிக்கமுடியாத குற்றம் மாத்திரமல்ல. மரண தண்டனை தரவேண்டிய குற்றம் என்பதையும் நான் அறிவேன். ஆனால், அதன்படி செய்து நீதியை நிலைநாட்டவேண்டுமானால்இன்று உலகத்தில் இருக்கும் எந்த வல்லரசும் மிஞ்சாது என்பதை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

நீதி: அதனால் படைகளுள் ஏற்பட்ட பலவித கொலைகளுக்கு என்ன பதில் சொல்கிறாய்?

மாலி: போர்முனையில் ஒரு அரசனுடைய பேராசைக்காகப்பல போர்வீரர்கள் உயிர் விடுகிறார்களே, அதற்கு யார் பொறுப்பாளி?

நீதி. அதைக்கேட்க உனக்கு உரிமையில்லை.

மாலி: எனக்குப் பேச்சுரிமையில்லையா?

நீதி: உண்டு. ஆனால் அரசாங்கத்தைப்பற்றி மாத்திரம் பேசக்கூடாது.

மாஜி: என் பேச்சுரிமையில் அதற்கு விதி விலக்களிக்கப்பட்டிருக்கிறதா? இதற்குப்பெயர் தான் பேச்சுரிமையா? இன்று அரசாங்கத்தைப்பற்றி பேசக்கூடாது. நாளை, அரசரைப் பற்றி பேசக்கூடாது. மற்றொரு நாள் சட்டங்களைப் பற்றிப் பேசக்கூடாது. இன்னொருநாள் அந்தச் சட்டங்களைப் பரிபாலிக்கிறசட்டசபைகளைப்பற்றிப் பேசக்கூடாது. பிறகு ஒன்றுமே பேசக்கூடாது. ஒரு சுதந்திர நாட்டின் சர்க்கார் அளித்திருக்கும் பேச்சுரிமை இதுதானா? சரி.

உள்ளே சென்று குசுகுசுவென்று யாரோ நான்கைந்து பேர் பேசி முடித்துக்கொண்டு வெளியே வந்தார்கள்.

அதில் ஒருவர்: மாஜினி! உனக்கு மரணதண்டனை. ஏதாவது கடைசியாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறாயா?

மாஜினி: கலகலவெனச்சிரித்தான். "இவ்வளவு நேரம் சொல்லியதே உங்கள் புத்திக்கு எட்டவில்லையே? இனிப்புதியதாக என்ன சொல்லி நீங்கள் தெரிந்துகொள்ளப் போகிறீர்கள்? (Justice is not in the hands of fools and heroism is not in the hands of Cowards.) நீதி மடையர்கள்கையில் இல்லை. வீரம் கோழைகள்பால் இல்லை. இதுதான் என் கடைசி வார்த்தை. முடித்து விடுங்கள் உங்கள் விசாரணை நாடகத்தை" என்றான்.

உடனே கைகால்களில் விலங்கிட்டுச் சிறையிலே தள்ளப்பட்டான் மாஜினி.

## மரணதண்டனை நெ. 1.

மாஜினிக்கு மரணதண்டனை. இது தலைப்பும் பத்திரிகையில் கொட்டை எழுத்தில். கோமனை எதிர்த்தான், கோர்ட்டை அவமதித்தான் என்பது உள்ளே காணப்பட்ட செய்தி.

## மறுநாள் காலை

ஏய் மாஜினி! வெளியேவா! காலைக்கடனை முடி. சிறையின் மணி அடித்துவிட்டது. பாரா மாற்றவேண்டும், வா, வா, வெளியேவா. நேர மாகிறது. வருகிறாயா, இல்லையா? வந்து உன்னை தெட்டி வெளியே தள்ளட்டுமா? இது என்ன உன் மாமியார்வீடா? கோபித்துக்கொண்டிருக்கிறாயே? வாவெளியே, உம், எழுந்திரு. எங்களுக்குத் தெரி யாமல் மூலையில்போய் படுத்துக்கொண்டால் விட்டு விடுவோமா? உம், வரமாட்டாய்? சாகப்போகின் றோமே சாப்பாடு எதற்கு என்று எண்ணுகிறாயா? உன்மேல் இருக்கும் ஆசையல்லப்பா. இது அரசாங் கத்தின் ஆணை. வேளைக்குவேளை சாப்பாடு போட்டுத்தான் தீரவேண்டும். உம், வா வெளியே அடமட்டி. மூதேவி என்றெல்லாம் அர்ச்சனை, அப் போதும் மாஜினி வெளியேவரவில்லை. ஆத்திரத் தோடு உள்ளே நுழைகிறான் முறுக்கு மீசைக் காரன். மாஜினியின் மேல்சட்டையும் அதில் 16-ம் நெம்பர் என்ற அடையாளமுந்தான் இருக்

கிறது. மாஜினியைக்காணோம். பதைபதைத்துப் போனான், சிறையதிகாரி. எப்படித் தப்பியிருப்பான்? யார்செய்த உதவி? காலில் விலங்கு கைகளில் விலங்கு, விலங்குகள் மட்டிலும் அரத்தால் ராவப்பட்டிருக்கின்றன. ஆனால், ஆளைக்காணோம். என்ன பதில்சொல்வது சர்க்காருக்கு? எப்படி உயிர்தப்பமுடியும? மாஜினிக்கு வந்த மரணதண்டனையை நம்மேல் சுமத்திவிட்டான் நாசகாலன். எப்படித்தப்புவது? யாரிடம் சரணாகதியடைவது? இதை நினைத்தே பாதி பைத்தியமாய்விட்டான் சிறையதிகாரி. எனினும் மாஜினி தப்பியவன் தப்பியவன்தான். ஏனெனில், அவன் எடுத்த காரியங்கள் இன்னும் முடிவடையவில்லை.

தலைமறைவாகத் திரிந்துகொண்டே காரியங்களைக் கவனிக்கவேண்டிவந்ததால், அந்த ஆண்டில் இவன் பிறந்தநாடான ஜினேவாவில் ஏற்பட்ட புரட்சி முழுத்தோல்வியடைந்தது. போதிய அனுபவமற்றவர்களும், புதியதாக இயக்கத்தில் சேர்ந்த இளையோர்களும், திறமையான வழிகாட்டிகளும் இல்லாததால் அந்தப்புரட்சி வெற்றிபெருமல் போய்விட்டது. ஒரு பெரிய போராட்டத்தைத் தொடங்குபவர்களுக்குச் சிறந்த ஆராய்ச்சியில் ஈடுபடுகிறவர்களுக்கு, சிறந்த சிந்தனையாளர்களுக்கு அடிக்கடி இதைப்போன்ற தோல்விகள் ஏற்படுவது மிக சாதாரணம் என்று அவனுக்குத் தெரியுமாகையால் அவன் அதில் அவ்வளவாக ஏமாற்றமடையவில்லை.

இந்தத் தோல்வியை அடுத்து எடுக்கப் போகும் நடவடிக்கைக்கு ஒரு உரைகல்லாக உபயோகித்துக் கொண்டான். இதனால், அணுகுண்டு போன்ற பயங்கரமான எழுத்து வன்மையோடு (Europe Centrale) யூரப் சென்ட்ரேல் என்ற பத்திரிகையை ஆரம்பித்தான். அதன் மூலம் சேவாய் நகரைப் பிடிக்க வேண்டுமென்ற ஆவேச உணர்ச்சியை மக்களுக்கு உண்டாக்கினான். அந்த எழுத்து ஈட்டிகள் மக்கள் ஒவ்வொருவருடைய சுதந்திர எண்ணத்தைச் சுருக்கெனத் தாக்கியது. அதைப் படித்த ஒவ்வொருவனும், பலம் பொருந்திய, பல நாட்கள் போர்ப்பழக்கம் பெற்ற, பல நாடுகளை வென்ற போர்வீரனைப் போல் மாறிவிட்டான். தலைவன் கட்டளைக்கு எதிர்நோக்கியிருந்தனர் போர்வீரர்கள். மலைக்குகை, மரப்பொந்து, அடர்ந்த செடிகள், ஆற்றோரம், மலைச்சரிவு, மாளிகையின் சிங்காரத் தோட்டங்கள், எங்கும் போர் வீரர்கள். அவர்கள் அயர்ந்துவிட்டால், போர்ப் பொறுப்பைத் தங்கள் தோளில் மாற்றிக்கொள்ளக் கொரில்லாப் படைகள். கட்டளையிட வேண்டிய தலைவனை அங்கே காணோம், ஆனால் விசையை முடுக்கிவிட்ட யந்திரம்போல் வேலைசெய்து கொண்டிருக்கின்றன படைகள். எவ்வளவு கீழ்ப்படிதல்! எவ்வளவு நேர்த்தியான ஒற்றுமை! என்றும் காணாத ஆவேசம்! இந்த நிலையில் 1834ல் ஒரு துப்பாக்கி வேட்டுக்கூடக் கிளப்பாமல் சேவாய் நகரம் பிடிபட்டது. மறுநாள் காலை சேவாய் நகரப் பாராளு

மன்றத் தலைவாயிலிலே இத்தாலிய இளைஞர் இயக்கத்தின் சுதந்திரக்கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கின்றது.

இந்த நிகழ்ச்சி பல வெளி வல்லரசுகளுக்குப் பயத்தை உண்டாக்கியது. யாரோ ஓர் இளைஞன் இவ்வண்ணம் செய்வதை நாம் ஆமோதித்தால், அதே நோய் நம் நாட்டில் பரவாது என்பதற்கு என்ன உத்திரவாதம்? கூடாது. இதைக் கண்டிக்க வேண்டும் என்று பல நாடுகள் தங்கள் பேனாவையும், மைக்கூட்டையும் கையில் எடுப்பதற்குள், நிலமையைச் சரியாக விளக்கவும், வெளி நாடுகள் தங்களைப் பற்றித் தவறாக நினைத்துக் கொள்ளாதிருக்கச் செய்யவும், (Young Europe) ஐரோப்பிய இளைஞர் என்ற கழகம் ஒன்றை ஏற்படுத்தினான். இதன் நோக்கம், சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகம் என்பவைகள், இதையொட்டி (Young Switzsdland) ஸ்விட்ஸர்லாந்து இளைஞர் என்ற இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் தான் ஆங்கிலம் பயின்றாலன்றி ஐரோப்பிய வல்லரசுகளுக்கு இத்தாலியின் நிலைமையைத் தெளிவாகத் தெரிவிக்க முடியாதென்று **1837**-ல் மாஜினி லண்டனுக்குச் சென்று ஆங்கிலம் பயின்று ஜனநாயகப் பிரியர்களான அந்த ஆங்கிலேயர்களுக்குப் பல கட்டுரைகளை வெளியிட்டான். அதைப் படித்த ஆங்கில நாட்டார் தாங்கள் அதுவரை மாஜினியின்பால் கொண்டிருந்த தவறான

கருத்தைத் திருத்திக்கொள்ள முயன்றதோடல்லா மல் 'அகில உலக அரசியல் மேதை', என்று பெயர் வாங்கிய ஆங்கில நாடு இன்னும் வீரன் மாஜினி யின் வன்மைமிக்க எழுத்துக்களைப் புத்தக வடிவில் வெளியிட்ட வண்ணம் உள்ளது.

## அறிவு ஈட்டிகள்

1839-ல் 'மால்டா மேரியர்'; 'கடமையில் மனிதன்,' என்ற இரண்டு நூல்களை வெளியிட்டான் மாஜினி. இவை வெளியான மேற்சொன்ன ஆண்டின் இறுதியில் தான். மிலான், மஸாய்னு என்ற இரண்டு இடங்களில் புரட்சியை நடத்திக்கொண் டிருந்த தலைவர்கள், மாஜினியை அழைத்துப்புரட்சி யில் பங்குகொள்ளச் செய்தனர். புரட்சிக்குத் தலைவன் கரிபால்டி. சொல்லவும் வேண்டுமா? அந்தக் கரிபால்டியின் தலைமையில் மாஜினி ஆயுதங்களைப் பெற்று வெற்றிகரமானதோர் புரட்சியை நடத்திச் சார்லஸ் என்பவனைச் சிங்காதனத்திலிருந்து மண் ணில் உருட்டி, மிலானை மீண்டும் சுதந்திர நாடாக்கி னன். தனக்கு, முன்பு மரண தண்டனை யளித்த மன் னன் சார்லஸ் ஆல்பர்ட் என்பவனை மண் கௌவச் செய்து பழிக்குப் பழி வாங்கினன். எனினும் அயல் அரசுகள் இவனை விடவில்லை.

## மரணதண்டனை நெ. 2.

இவன் செய்த இந்தக் கோரக்கொடுமைக்காக இவனுக்கு இரண்டாவது முறையாகக் கிடைத்த பரிசு மரணதண்டனை இரண்டாவது முறையும்

மரணதண்டனை. குலுங்கக் குலுங்கச் சிரிக்கின்ருன். "மரணதண்டனை என்னைப் பொறுத்தவரை மிகமலிவான பொருள். வா என்ருல் வரும். போ என்ருல் போகும். அதைவிடக் கொடிய தண்டனை ஏதாவது உண்டா என்ருல் இல்லை. அதற்கப்பால் எந்தத் தண்டனையும் எந்த நாட்டுச் சட்ட புத்தகத்திலேயும் இல்லை. ஆகையால் சட்டத்தின் இறுதிக் கோடு மரண தண்டனைதான். அவன் பூதஉடலைப் பொசுக்கிப் புகழுடலுக்குச் சுதந்திரம் அளித்துவிடுவதற்குப் பெயர் மரணதண்டனை. அவன் உயிரோடிருக்கும்போது புகமுடியாத இடமெல்லாம் அவன் புகழ்பரவ, தன்னையறியாமல் இடந்தந்துவிடுவதற்குப் பெயர் மரணதண்டனை. ஏனெனில் நிரபராதியான அவனிடத்திலிருந்து விரைவில் பறித்துவிடக்கூடிய பொருள் உயிர் ஒன்றுதான். அவன் விரும்பினுல் அதையாருக்கு வேண்டுமானுலும் பராதீனப்படுத்திவிட முடியும்; மற்ருேர் குற்றவாளிக்கு ஈடுசெய்துவிட முடியும். அறிவாளியின் மூளையை ஆயிரக்கணக்கான பொற்காசுகளுக்கு வாங்கிவிடுகிறது பலஅறிவுள்ள சர்க்கார். ஆனுல் இந்தச் சர்க்கார். சுதந்திரத்திற்குப் பரிசாக என் உயிரை வெகுமதி கேட்கிறது. இதைவிடப் பெருமை எனக்கென்ன வேண்டும்? கோடானுகோடி மக்கள் வாழ, மாஜினி உயிரிழந்தான் என்ருல், அதில் துக்கப்பட என்ன இருக்கிறது? இந்த அற்ப உயிரை நான் மனமார அவர்களுக்குத் தாராளமாக அளித்துவிட முடியும். ஆனுல்,

யாருக்கும் சொந்தமாக்க முடியாத பொருள், எந்த அரசாங்கம் எவ்வகையில் முயன்றாலும், எடுத்துக் கொள்ள முடியாத பொருள் சுதந்திரம் ஒன்றுதான். தீயால் பொசுக்க முடியாத பொருள், அலைகளால் மோதி அடித்துக் கொண்டுபோக முடியாத பொருள், அலைகடல் பொங்கித் தரணியைத் தன்னுள் அடக்கிக் கொண்டாலும், அழிக்க முடியாத பொருள் சுதந்திரம் ஒன்றுதான். தாய் நாட்டின் மணிணை முத்தமிட்டான் சுதந்திரத் தந்தை ரூசோ. அதுபோல் நானும் என் தாய் நாட்டை முத்தமிடுகிறேன். அதற்காக நான் எதையும் செய்யத் தயாராயிருக்கிறேன். அது விரும்பும் எதையும் நான் கொடுத்துத் தியாகத் தழும்புகளை என் உடல் முழுதும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால். அந்தத் தியாகத்திற்காக நான் எதையும் கைக்கூலியாக, வீரமானியமாகப்பெற்றுத் தியாகி என்று வெட்கமில்லாமல் திரியமாட்டேன். கொடுப்பவன் தான் தியாகியே தவிர, வாங்குகிறவனல்ல தியாகி என்பதை என் வாழ்விலிருந்தாகிலும் வையகம் உணர்ந்துகொள்ளட்டும். ஆனால், ஏழ்மையின் காரணமாக யாராவது கைம்மாறு விரும்பி, அதைப் பெற்றுக்கொள்வார்களானால், தொண்டர்கள் என்று வேண்டுமானால் சொல்லிக் கொள்ளட்டும். ஆனால், தியாகி என்று சொல்லி, அந்தப் புனிதமான வார்த்தையின் கண்ணியத்தைக் கெடுக்காதிருக்க வேண்டிக் கொள்கிறேன்.

ஆகவே சுதந்திரத்தைக் காப்பாற்றத் தான் துச்சமென மதிக்கும் உயிரைத் தியாகம் செய்கின்றான். மேலும் மனிதன் ஒரு தடவை தான் பிறக்கின்றான். அதே போல் ஒரு தடவைதான் இறக்கின்றான். அந்த இறப்பைச் சற்று முன்கூட்டிக் கொடுத்து விடுவதற்குப் பெயர் மரண தண்டனை.

மரணம். மனிதனோடு பிறந்தது. மாற்ற முடியாத இயற்கையின் நியதி. மரணம் மனிதனுடைய நிழல். ஆபத்தால் மரணம், உடல் நோயால் மரணம், உட்கொள்ளுவது நஞ்சானல் மரணம். அனல் கக்கும் எரிமலையால் மரணம். அரசன் பேராசையால் மரணம். நாட்டின் எல்லையைத் தாண்டுவதற்காக ஏற்படும் போராட்டங்களால் மரணம். கடல் கொந்தளிப்பால் மரணம். கார்மேகங்களால் எழும் இடியாலும் மின்னலாலும் மரணம். தவறி விழுந்தால் மரணம். தடாகத்தால் மரணம், விஷ ஜந்துவால், கொடிய விலங்கால், கோர சம்பவத்தால், வைசூரியால், வாத நோயால், மரணம். மனிதனுக்கு முடிவு உண்டென்பதை, அதோ! அந்த மரத்திலிருந்து உதிரும் இலைகள் சொல்லுகின்றன. ஈமக் காட்டில் எழும் புகை சொல்லுகின்றது. மனிதன் தன் வினையால் தானே அழிவைத் தேடிக்கொள்கிறான் என்பதை, அவன் கைத்திறன் அனைத்தையும் ஈடாக்கி அவன் செய்த வாள் முனையே சொல்கிறது. ஆட்சி பீடம், பலி பீடம் இரண்டும் அடையாளங் கண்டுபிடிக்க முடியாத 'அலைகளைப்

போன்றவை என்பதை அவற்றின்மீதிருந்து சிந்தும ரத்தக் கறைகள் காட்டுகின்றன.

ஆகவே, தானே அகால மரணத்தைத் தேடிக் கொண்டால் மன்னிக்க முடியாத குற்றம். ஒரு நீதியின் போக்கு என்னே! என்னே! சட்டங்களின் செல்வாக்கு!" என்று கூறிச் சிரிக்கின்முன்.

இப்படித் தரப்பட்ட மரண தண்டனையும் வீரன் மாஜினியின்பால் கேலிக்கூத்தாக, வீண் விளையாட்டாக, விருதாவேலையாகப், போய்விட்டது, ஏன்? இரண்டாவது முறையும் மாஜினிக்கு மரண தண்டனை எனக் கேட்டதும் மக்கள் திரண்டனர். கடையடைப்பு, கண்டனக்கூட்டங்கள். கருப்புக்கொடி ஊர்வலம். அலுவலகங்களில் எல்லாம் ஆர்ப்பாட்டம்.

## கண்டனக் கூட்டம்

எங்கும் கருப்புக்கொடி பறக்க விடப்பட்டிருக்கின்றன. கூட்டத்துக்குக் காரல் மார்க்ஸ் தலைமை வகிக்கிருர்.

## தலைமையுரை

தோழர்களே!

இத்தாலி அழிவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றது. தெளிந்த இலக்கியக் கர்த்தாவும் சிறந்த சுதந்திர வீரனுமான மாஜினிக்கு மரண

தண்டனையளித்திருக்கிறது. நாளை மரண தண்டனை நிறைவேற்றப்படும் என்ற செய்தி கிடைத்தி ருக்கிறது. அது உண்மையானால், இத்தாலிய நாடு மாத்திரமல்ல, அகில உலகமே ஓர் ஒப்புயர்வற்ற நண்பனை இழக்கப்போகிறது. இது ஜனநாயக விரும்பிகளுக்கு மாத்திரமல்ல, குடி உரிமை பெற் றிருக்கிற ஒவ்வொருவனுக்கும் ஏற்படும் சரிகட்ட முடியாத நஷ்டமாகும். அந்த வீரன் பின்னால் நம் மைப் போன்ற பலர் இருந்தும் பயனில்லை என்ற தீராப் பழி நமக்குமாத்திரமல்ல, சமாதான விரும் பிகளுக்கும் ஏற்பட்ட சகிக்க முடியாத அவமானமா கும். எடுத்ததற்கெல்லாம் மரண தண்டனையளித்து விடும் மதியில்லாத சர்க்காருக்கு நாம் ஒரு நல்ல பாடத்தைக் கற்பிக்கவேண்டும். இத்தாலி மாத்திர மல்ல, அகில உலகமே அவன் விடுதலைக்குப் போராடுகின்றது. என்ற பேரொளியை எழுப்ப வேண்டும். நாட்டுக்கு விடுதலை பின்பு. முன்பு அவ னுக்கு விடுதலை வேண்டும் என்ற நமது வீரக் குர லைக் கொண்டு இத்தாலியப் பாரானு மன்ற இரும் புக் கதவுகளைத் தட்டுவோமாக. மாஜினி, மரண தண்டனையிலிருந்து தப்ப வேண்டும் இதுவே நமது வேண்டுகோள். தவறி அவனைத் தூக்கிலிட் டால், அரசாங்கம் இருக்குமிடம் தெரியாமல் நொறுங்கும். இதுவே எமது எச்சரிக்கை. சமா தானமா, சமரா என்பதைச் சொல்ல வேண்டியது அந்தச் சர்க்காரின் பொறுப்பு. பிறகு அதன் இஷ் டம். இதோடு முடிக்கிறேன். வாழ்க மாஜினி! ஓங்குக சுதந்திரம்!

மார்க்ஸின் தலைமையுரை முடிந்தது. இதுவரை பல கூட்டங்களிலே பேசியிருக்கின்றார். மார்க்ஸ் இவ்வளவு சூடான வார்த்தைகளை அவர் எப்போதும் உபயோகித்ததில்லை. எவ்வளவு மனவேதனையிருந்தால் இப்படி நெருப்பையள்ளிக் கொட்டியிருப்பார் அந்த தள்ளாத வயதினர்? இப்படிப் பேசி எறியீட்டிகள்போல் கிளம்பினர் மக்கள். இந்தச் செய்தி இத்தாலிக்கு எட்டிவிட்டது.

## புரட்சி

"மாஜினியின் மரணதண்டனையை ரத்து செய். வீரனை விடுதலை செய். வீண் விரோதத்தைச் சம்பாதித்துக்கொள்ளாதே. நாட்டுக் கசப்பை நாவால் சுவைக்காதே. ரத்தவெறிகொண்டலையாதே. கித்தாப்பு மடியாதிருக்க ரத்தாபிஷேகம் செய்யாதே. நாயினும் கடையர்கள் மக்கள் என்றெண்ணாதே. மாஜினியின் மரணதண்டனையை நிறைவேற்றி மக்கள் விரோதத்தைத் தேடிக்கொள்ளாதே. மரணதண்டனையை நிறைவேற்றி அவன் உடல் ரத்தம் குளிர்ந்து போவதற்குள் மன்னன் தலை மண்ணில் உருளும். அவன் உடல் தூக்கு மரத்திலிருந்து கீழே இறங்குவதற்குள் வேந்தன் சவம் சுடலை நோக்கிச் சென்றுவிடும். ஆத்திரத்தால் அறிவை இழந்து விடாதே. அபாயத்தை விலைகொடுத்து வாங்காதே. அற்பர்கள் பேச்சைக் கேட்டு, சாம்ராஜ்யக் கௌரவத்தைக் காப்பாற்ற, வெட்டி வீரம் பேசி மக்கள் ஆவேசக் கட

வில் நீந்தாதே. ஆழம் தெரியாமல் காலைவிட்டு அவஸ்தைப்படாதே. மாளிகையின் மண் குதிரைகளை நம்பி ஆற்றில் இறங்காதே. எச்சரிக்கை, எச்சரிக்கை' என்று கிளர்ச்சி பூகம்பம் எழுந்து விட்டது. இத்தாலிய நாடே அதிர்ந்தது, கடலுக் கப்பாலான நாடுகளிருந்து கண்டனக் கணைகள் வந்து குவிந்த வண்ணமிருந்தன.

'சட்டம் சொல்கிறது', இது சர்க்கார் தரப் புக்கூச்சல். "ஆல்ப்ஸ் மலையா அசைக்க முடியாமலிருக்க? "அடித்து எழுது சட்டத்தை," இது மக்கள் தரப்பில். 'மன்னன் உத்திரவு', இது மாளிகைக்குரல். "மன்னன் மக்கள் பிரதிநிதி"...இது மக்கள். "அரசன் குடிகளின் தாய்"—இது அரச பரம்பரையினர் ஆவேசக்குரல். அரசன் குடிகளின் தாயுமல்ல, தந்தையுமல்ல மக்கள் அயர்ந்து தூங்கும் நள்ளிரவில் உருவிய வாளோடு ஊர் சுற்றும் காவலன். சேமநிதிக்கோர் வைப்பு. அவர்கள் அறிவெனும் நீர்ப்பாசன வசதிக்கோர் அணையில்லாத ஆறு. மன்டலத்தைப் படைத்தவனல்ல மன்னன். மக்கள் படைத்தனர் மன்னனை. மாளாத பெருமையளித்தனர். அருளாளனே! என்றனர். அலட்சியமாக ஆட்டினான் தலையை. போாளனே! என்றனர். பெருமை கொள்ளவில்லை. தவறுகப் பேடிகள் என நினைத்தான் மக்களை. இன்று எமது வழிகாட்டியை, இலக்கியக்கர்த்தாவை, சுதந்திர வீரனை, தன்னலமற்ற தியாகியை, உயிரைத் துச்சமென மதித்த உத்தமனை, புரட்சி பல கண்ட

வனை, புல்லர்கள்போல் வாழ்ந்த எங்களைப் புலி நிகராக்கியவனை, எங்கள் மாவீரன் மாஜினியை, விடுதலை செய். வீணில் மடியாதே. வீராப்புப் பேசாதே! உனக்கு மணிமுடி யளித்த மக்கள் கடல் கொந்தளிக்கிறது. இப்படி ஒருவரா, இருவரா? எல்லா நாடுகளிலும் கேட்டனர். பிரஞ்சுப் புரட்சியை எழுதிய தாமஸ் கார்லைல் கண்ணீர் சிந்துகிறார் பாரிசில். கேவோரும் கரிபால்டியும் கண்டனக் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்கின்றார்கள். கூட்டங்களைக் குதிரைப் பட்டாளங்கள் கலைக்கின்றன. மாஜினி முன்போல் சிறையிலிருந்து தப்பி யோடிவிடப் போகிறான் என்று துணையாக இரண்டு குற்றஞ்செய்யாத கைதிகள். சிறைச்சுவரைச் சுற்றிப் பலமான பாதுகாப்பு. இதாலிய இளைஞர் இயக்கம், ஐரோப்பிய இளைஞர் இயக்கம், ஸ்விட்ஜர் லாந்து இளைஞர் இயக்கம், மறுமலர்ச்சிக் கழகங்கள், மாண வர் முன்னேற்ற சங்கங்கள், இலக்கிய ஆராய்ச்சி நிலையங் கள், பேச்சுரிமை எழுத்துரிமைச் சங்கங்கள், விடுதலைப் போராட்டச் சங்கங்கள், சீர்திருத்தக் கழகங்கள், கருஞ்சட்டைப் படை, கொரில்லாப்படை யணிவகுப்பு, சிறந்த அரசியல் வாதிகள் ஆகிய அவ்வளவும் கண்டிக்கின்றன மாஜினி யின் மரணதண்டனையை. கண்ணீர் சிந்துகின்றனர் சுற்றத்தாரும் தோழர்களும். இவ்வளவும் வெளியே.

## மாளிகையின் உள்ளே

மன்னர் இங்குமங்கும் ஓடுகின்றார். மதிமயங்கி நிற்கிறார். பல பெரிய மனிதர்களிடம் யோசிக்

கிறார். மிலானிலிருந்து நேபிள்ஸுக்கும், நேபிள் ஸிலிருந்து ரோமுக்கும் போப்பாண்டவர், கசடனை விடாதே, காட்டுக் கூச்சலைக்கண்டு கலங்காதே, கயவனுக்கு உயிர்ப்பிச்சை யளிக்காதே என்றெல்லாம் கண்டிப்பான உத்திரவுகள் அனுப்பிக் கொண்டி ருக்கின்றார். ஆனால், இங்கே நிலைமை, வெளியே தலைநீட்ட முடியாது. மன்னன் மாத்திரமல்ல, மாளிகையின் பணியாட்களுங் கூட. தண்டனையை நிறைவேற்றும் நேரம் நெருங்குகிறது. மக்கள் ஆவேசம் அதைவிட விரைந்தோடுகிறது. வேந்தன் கட்டளை - தூக்குமரம், மாஜினியின் விடுதலை, மக்களின் ஏகமனதான குரல் ஆகிய இவைகளில் எது வெற்றிபெறுமோ யார் கண்டார்கள் என்ற சந்தேகம் ' அவனைக் கொல்லும்வரையிலும் இப்படித் தான் கத்துவார்கள், கொன்று பிணத்தைத் தூக்கி வெளியே எறிந்தால் அந்தத் துக்கத்திலேயே பிணத் தின் பின்னால் போய்விடுவார்கள் என்று இப்படித் தூபம்போடுகிறான் இதாலியசாணக்கியன். அரசனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அவன் எப் போதும் கண்டதில்லை இவ்வளவு பெரிய எதிர்ப்பை. என்ன ஆகுமோ தூக்கிவிட்டால் என அஞ்சுகின்றான். ஒரு மனிதன் உயிருக்காக உலகமே கண்டிக்கின்றது. காரல்மார்க்ஸ் கார்லைல், கரிபால்டி கேவோர், அப்பப்பா! என்ன மகத்துவம் இவனுக்கு? என்றெல்லாம் மன்னன் சிந்திக்கின்றான். எனினும் தூக்கிவிட வேண்டும் என்ற துணிவு பனிபோல் கரைகிறது. தூக்கிவிடும் தடுக்கர்கள் இருக்கத்தான்

செய்தான். ஆயினும் மன்னன் விவேகத்தை வரவழைத்துக்கொண்டான். இன்று தன்னை ஏவி விடுபவர்கள் நாளை வரப்போகும் ஆபத்துக்குத் தலைகொடுக்க மாட்டார்கள். ஒரு வேட்டு சத்தங் கேட்டவுடன் ஒன்பதுகாதம் ஓடி யொளிவார்கள். இவர்கள் பேச்சைக்கேட்டு இன்னல்பட்டு, இறப் பின்வாயில் விழுவதைவிட, மாஜினியை மன்னித்து, மக்கள் அபிமானத்தைப் பெற்று மன்னனாகவே வாழ் வது மேல் என முடிவு செய்து கொண்டான். பிறகு பலர் அவனைக் கெடுக்க முயன்றார்கள். எனினும் அவன் தன் முடிவை மாற்றிக்கொள்ளவில்லை. தண் டனை நிறைவேற்றுவதற்குச் சிறிது நேரத்திற்கு முன்பு.

## விடுதலை

'மாஜினிக்கு விடுதலை' என்று கொட்டை எழுத் துக்களால் பொறிக்கப்பட்ட பலகை மன்னன் மாளிகை முன்பாகத் தொங்கவிடப்பட்டது. விடுதலை உத்திரவை ஏந்திச் சிறைக்கோட்டம் நோக்கி ஓடு கிறான் ஓர் குதிரைவீரன். தன்னை எங்கே கொன்று விடப் போகின்றார்களோ என்ற பயத்தால், 'மாஜி னிக்கு விடுதலை,' 'மாஜினிக்கு விடுதலை,' என்று அவனே தெருவெல்லாம் கத்திக்கொண்டு ஓடுகிறான்.

## மக்கள் பரவசம்

'மாஜினிக்கு விடுதலை,' என்றவுடன், உண்மை யாகவா என்றனர் மக்கள். உண்மையாக மாத்திர மல்ல, உறுதியாக என்றது அரசாங்கம். கொண்

டாடினர் மக்கள். குதூகலக் கடலில் குதித்தனர் கொரில்லாப் படையினரும், இளைஞர்களும். பாராட்டினர் பெரியோர். பாராட்டு மடல் ஒன்று பாராளுமன்றத்துக்கு அனுப்பப்பட்டது. சரியான நேரத்தில் சரியாக நடந்துகொண்ட அரசாங்கத்தின் சாமர்த்தியத்தை வியந்தனர் விவேவிகள். பிணமாகக் காணவேண்டிய பெருந்தலைவனை உயிரோடு கண்டமக்கள், பெற்றெடுத்த தாயைப் போல் அணைத்துக் கொண்டனர். "வாழ்க விடுதலை வீரன்," "வாழ்க மாஜினி!" என்று வாயார வாழ்த்திப் பேரொலி செய்தனர். இறப்பெனும் கோரஉருவத்தின் கொடியபற்களுக்கிடையே சிக்கிச் சின்னபின்னப்படவிருந்த எங்கள் உண்மையான தலைவனை உயிரோடு மீட்டோம் என்று எக்காளமிட்டனர் மக்கள். எங்கும் வெற்றிவிழா. பொது விடுமுறை. பூரித்தது இத்தாலி. புன்னகை புரிந்தன அண்டை நாடுகள். களிப்பெய்தினர் எல்லாரும். ஆனால், முணுமுணுத்தனர் மன்னர் பரம்பரையினர்.

## தேர்தல்

அடுத்துப் பாராளுமன்றத்தேர்தல் வந்தது. மாஜினியை அதன் தலைவர்களாக்கினர்கள். மக்கள் போட்ட அபரிமிதமான ஓட்டுகள் மூலம், மரண தண்டனையடைந்த மாஜினி பாராளுமன்றத் தலைவன். தூக்குக் கயிறு சுற்றும் கழுத்தில் மலர் மாலைகள். குற்றவாளி இன்று தலைவன். சிறைக் கைதி செங்கோலுக்குப் பக்கத்தில். மன்னிப்புக்

கேட்கும் வாயால், மக்களுக்குக் கட்டளை. காலம் ஓர் உருப்படாத கசடு. எதையும் எளிதில் மாற்றி யமைக்கும் ஆற்றலுடையது. தேர்தலில் வெற்றி. எதிர்த்து நின்றவன் மண்ணைக் கௌவி இத்தா லியை விட்டே ஓடிவிட்டான். பதவி வந்தவுடன் மோடிக்கு அடங்கும் பாம்பாய் விடவில்லை மாஜினி. மாஜினியின் மரண தண்டனையை எதிர்த்து கிளர்ச்சி செய்த மக்களே, அவனைப் பாராளு மன்றத் தலைவனாக்கினார்கள். அவர்கள் அன்பால் அவனுக்களித்த வெகுமதி என்றாலும் அவன் அந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏன்? அந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளும் உரிமையை எவனும் ராஜவிசுவாசப் பிரமாணம் செய்த பிறகே அந்தப் பதவியில் அமரலாம் என்றிருந்த சட்டங் களுக்கும் சம்பிரதாயங்களுக்கும் தலைவணங்க மறுத்துவிட்டான்.

## மறுப்பு

'சடங்கு' என்றனர் மக்கள். "மன்னன் மக்களையாழ்வதும், அடங்காத மனிதர்களுக்கு மரண தண்டனையளிப்பதும் சம்பிரதாயம் சட்டம் சடங்கு என்றுதான் இதுவரை சாதித்து வந்தனர் மன்னர்கள். அதை நாம் ஏற்றுக் கொண்டோமா?" என்று கேட்டுச்சிந்திக்கும்படித் தூண்டினான் மக் களை மாஜினி. ஆம், அதுவும் உண்மைதான் என்று தலையாட்டினர் மக்கள். ஆகவே அந்தப்பதவியை எந்த மக்கள் தன் குரலுக்கு ஏகக்குரலை எழுப்பி னார்களோ, எந்த மக்கள் தான் எழுதிய ஓரே வரி

யால் பல்லாயிரக்கணக்காகப் பொதுத்திடலில் கூடினார்களோ, எந்த மக்கள் தன் ஆவேசக் குரலை இத்தாலி முழுதும் எடுத்துச்சென்றார்களோ, எந்த மக்கள், தன் சொல்லம்பால், ஏகாதிபத்தியப் பாசிச மமதை மிகுந்த இராணுவத் தமுக்கில் குத்தி அதன் தோல்வாயைக் கிழித்தார்களோ, எந்த மக்கள் தன் பேறுவின் முனைகொண்டு அதிகார ஆணவத்தை ஆட்டிப்படைத்தார்களோ, அந்த மக்களே விரும்பி வருந்தி உழைத்துத்தந்தப் பதவியை ஏற்க மறுத்தான் சுதந்திர வீரன் மாஜினி, தான் மூடப்பழக்க வழக்கங்களுக்கும் சடங்கு சம்பிரதாயங்களுக்கும் அடிமைப்பட முடியாது என்ற காரணங்காட்டி.

## ஒரே குழப்பம்

இப்படித் திரும்பித் திரும்பி வந்த சூழ்நிலைகளைப் பார்த்த பிறகு, அரசியல் ஒரு சூதாட்டமென எண்ணி, அதன் சதுரங்கத்தை எப்படி அமைப்பது என்ற திட்டம் வகுத்துத் தன் தாய் நாட்டைத் தரைமட்டமாக்கிக் கொண்டிருந்த அயல் அரசை ஆங்கிலேயர் உதவிகொண்டு எப்படியாகிலும் நீக்க எண்ணினான். அவன் இறுதி வரையிலும் புது எண்ணங்களின் புதையலாகவே இருந்தான். இளைஞர்கள், “போதும், போதும்” என்று சொல்லும் அளவுக்குப் புதுக்கருத்துக்களைத் தூவினான். அவனை ஒரு சாதாரண வீரனாக்கி உள்ளம் குளிர்ந்து விடாமல், புரட்சி வீரனாக்கி, இலக்கியக் கர்த்தாவாக்கி, உலக வரலாற்

றிலே அவன் அழியாப்புகழை இடம்பெறச் செய்தார்கள் இதாலிய இளைஞர்கள். அவன் சொல்லில் சுயநலம் தொனிக்காது. செயலில் பேராசை தோன்றாது. சொற்களையடுக்கி ஆணித்தரமாகப் பேசுவான். கேட்டவுடனே செயலுக்குத் தூண்டும் சக்திவாய்ந்தவை அவனுடைய சொல்லம்புகள். ஒன்று திரளும் மனித ஆற்றலை மலைபோல் குவிக்கும் மாண்புமிக்க சொற்செல்வன். அவன் பேச்சில் மயங்கிச் செயலற்றுக் கிடக்கும் மக்களை உண்டாக்கவில்லை. எப்போது அவன் பேச்சு முடியும், முடிந்த பின் அவன் சொல்லியவண்ணம் செய்வோம் என்ற சுறுசுறுப்பைத் தாங்கும் மக்களை யுண்டாக்கினான்.

## மாநாடு

இதே நேரத்தில் லண்டனில் ஒரு பெரிய மாநாடு. பொதுவுடைமைத்தந்தை, காரல் மார்க்ஸ் தலைமைவகிக்கின்றார். நடைபெறப்போவது அகில உலகத் தொழிலாளர் மாநாடு. சொல்லவேண்டுமா? முதலாளி வர்க்கம் மௌனம் சாதிக்குமா? எப்படியும் அந்த மாநாட்டை நடத்தவொட்டாமல் தடுக்க என்னென்ன முறைகளைக் கையாள முடியுமோ, அவ்வளவும் செய்து பார்த்துச் சலித்துத் தங்கள் முட்டாள்தனத்துக்கு முடிவிழா செய்துவிட்டு, 'இந்தச் சண்டாளத் தொழிலாளர் மாநாட்டைப் பார்ப்பதே பெரிய பாவம்'' என்று பல முதலாளிகள் வெளியூர்களுக்கு உல்லாசப் பிரயாணம் சென்றுவிட்டனர்.

ஆனால், தொழிலாளிகள், மானிட வர்க்கத்தின் மனசாட்சியை அளந்துகாட்டிய மாபெரும் சிந்தனையாளனை இன்று காணப்போகிறோம் என்று கொந்தலிக்கும் கலிப்புக்கடலில் குதூகலிக்கின்றனர். மூலதனம் என்ற மருந்தால் வறுமை என்ற நோயைத் தீர்த்தெறிந்த வல்லவனைக் காணப் போகின்றோம்; ஆண்டவன் வரப்பிரசாதமென அகில உலக மக்களை அறியாமையில் தள்ளி, உழைப்பை உறிஞ்சி வாழ்ந்த மந்தகாச வாழ்வினர் மதிக்கு ஒரு விதியை (கட்டளை) வகுத்துத் தந்த உயர்ந்தோனைக் காணப்போகின்றோம், சற்றேறப்ப 30 ஆண்டுகள் நூல் நிலையத்திலேயே அல்லும் பகலுமாக உட்கார்ந்து, பல அறிஞர்கள் கருத்துக்களைப் படித்துத் தனக்கு முன்பும் பின்பும் யாராலும் வரையறுக்க முடியாத சீரிய திட்டத்தை எழுத்துருவில் தந்து, நடைமுறைக்குச் சாதனமான கொள்கைகளை வகுத்துக் குவலயத்துக்கு நல்கிய நல்லவனைக் காணப்போகின்றோம் என்று மக்கள் தோரணங்கட்டி வளைவுகள் அமைத்து விளம்பரங்கள் செய்து மாநாடு கூட்டி, மார்க்ஸ் அவர்களைத் தலைமை ஏற்கக் கேட்டுக்கொண்டனர் வரவேற்புக் கழகத்தார்.

தலைமைப் பீடத்தில் தலைவர் உட்காருவதற்குள் விண்ணதிர வாழ்த்தொலிகள், வான்முட்டக் கைதட்டல். எங்கும் ஓரே களிப்பு. எல்லாருடைய முகத்திலும் ஜீவகளை. உள்ளத்துக்கோர் புத்துணர்வு. உடலில் ஓர் புதுமுறுக்கு. இவ்

வளவு வசீகரத் தோற்றத்தோடு அனைவரும் வீற்றி ருக்கின்றனர். அவ்வளவு பெரிய கூட்டத்திலும் ஒருவன் ஆடாமல் அசையாமல் வீற்றிருக்கின்றான். எந்தவித மாற்றமும் அவனிடம் காணமுடியவில்லை. எல்லா நாட்டுப் பிரதிநிதிகளும் வந்திருக்கின்றனர். அதைப்போலவே இத்தாலிய நாட்டு இளைஞன் மாஜினியும் அங்கே வீற்றிருந்தான். அவன்தான் நாம் மேலே சொன்ன மௌனி மாஜினி. தன் மரணதண்டனையை ரத்துசெய்ய வேண்டுமென்ற கண்டனக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த மார்க்ஸ் அவர்களை நேரில் காணவேண்டுமென்ற அபிமானத்தாலல்ல அவன் வந்தது. அவரது அரிய கருத்துக்கள் தான் தற்சமயம் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிக்கு ஏதாவது துணை செய்யுமா என்பதைக் கவனிக்கவும், இந்த மாபெரிய சிந்தனையாளன் எழுத்தைப் படித்தி ருக்கின்றோமேயன்றிப் பேச்சைக் கேட்கவில்லையே இதுவரை. அதையும் கேட்போம் என்ற ஆசை யாலும் வந்திருக்கின்றான்.

ஆனால், கார்ல்மார்க்ஸ் எழுத்துக்களுக்கு இருந்த வன்மை பேச்சுக்கில்லை. சொல்லாற்றல் படைத்தவரல்ல மார்க்ஸ். ஆனால் இதுவரை உலகங் கண்டிராத எழுத்துக் குவியலை எரிமலை யாக்கி இரும்புப் பெட்டிக்குப் பக்கத்திலே வைத்த வர் இவரைவிட வேறு யாரும் இல்லை.

தலைமையுரை முடிந்தது. ஏதோ ஒன்றை எதிர்பார்த்து, எதிர்பார்த்தது கிடைக்காமல்

ஏமாற்றத்தோடு திரும்புபவர்களைப்போல் திரும்பினான் மாஜினி. அதுவரை தான் நினைத்துக்கொண்டிருந்த கருத்துக்களுக்கு மிக சமீபமாக இருக்கும் அவருடைய கருத்துக்களும் என்று எண்ணினான். முற்றிலும் ஏமாறவில்லை. ஆனால் ஒரு சில கொள்கைகளே மாறு பட்டன. முழு சந்தோஷத்தோடு திரும்ப முடிய வில்லையே தவிர, முற்றிலும் ஏமாற்றத்தோடு திரும்ப வில்லை. அதுவரை ஓரளவுக்கு அமைதி கொண்டான்.

மதம் மனிதனுக்கு அபினியைப் போன்றது. ஆகையால் அதை ஒழிக்கவேண்டுமென்பதும், பொரு ளாதாரத்துறையில் வாணிபம் முதல் கைத்தொழில் வரையுள்ள எல்லாப் பணப்பெருக்கச் சாதனங்களும் அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் இருக்கவேண்டும் என் பதும் மார்க்ஸின் கருத்து. ஆனால், மாஜினியின் கருத்து சற்று மாறுபட்டது. சமுதாயத்துறையில் ஆண்டவன் அனைவரையும் ஒன்றாகப் படைத்தான் என்பதும், அரசியல் துறையில் தன் சொந்தநாட்டை முதலில் கவனிக்கவேண்டுமென்பதும், பொருளாதாரத்துறை யில், வாணிபமும், உற்பத்தியும், தொழிலும் சில தனிப் பட்டவர்களிடத்திலும், சில அரசாங்கத்திடமும் இருக்கவேண்டுமென்பது மாஜினியின் கருத்து.

எந்தக் கொள்கையின் பேராலும் ஒன்றுபடாத மக்கள், ஆண்டவன் பேரால் ஒன்றுபடுத்திவிட முடியும் என்று திடமாக நம்பினான் மாஜினி. அந்த ஆண்டவன் பேரால் செய்யப்படும் பல அக்ரமங்களை

வன்மையாகக் கண்டிப்பதில் யாருக்கும் பின்வாங்கிய வனல்ல• அரசியல் துறையில், அகில உலகத்தைக் கட்டியாண்டு அதனுல் வரும் தொல்லைகளை நீக்கவே தன் சொந்த நாட்டைப்பற்றி எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சி தளர்ந்துவிட்டாலும் தளர்ந்துவிடக்கூடும் என்று சந்தேகப்பட்டான். ஆகவே அரசியல் துறையில் முதலில் தன் நாட்டைக் கவனித்துப் பிறகு வேண்டுமானுல் வெளிநாடுகளைக் கவனிக்கலாம் என்று கருதியிருந்தான். சில தொழில்கள் அரசாங்கத்தின் திறமையற்ற காரணத்தாலும் லஞ்ச ஊழலின் பயங்கரச் சதியாலும், வெற்றி பெருமல் போவதால் சில தனிப்பட்ட தொழில்கள் தனிப்பட்ட முதலாளிகளிடம் இருக்கவேண்டும் என்பது மாஜினியின் கருத்து.

இதனுல் மாநாட்டின் கருத்துக்களை முழுமனதோடு ஆதரிக்க முடியாத நிலையில் இத்தாலி திரும்பினுன். மீண்டும் ஸ்விட்ஜர்லாந்துக்குப்போனுன். என்றுலும் அந்த அரசாங்கம் இவனை எல்லைக்குள்ளே அனுமதிக்கவில்லை. வெளியே விரட்டிவிட்டார்கள். மரண தண்டனை யடைந்த குற்றவாளி! மனிதர்களை மிருகமாக்கி மாளிகைகளை மயானமாக்க நினைக்கும் மாபாதகன்! இவன் முகத்தில் விழிப்பதே மாபாதகம் - போ போ! வெளியே போ! - உள்ளே அனுமதிக்க மாட்டோம் என்று வெளியே தள்ளிவிட்டார்கள். இப்படி நடந்த ஆயிரந்தடவைகளிலே இது ஒரு தடவை. ஏளனச் சிரிப்போடு இத்தாலிக்குத் திரும்பினுன்.

இருப்புக்கொள்ளவில்லை, பல தலைவர்களிடம் தொடர்பு கொள்ளவேண்டும் என்று நினைத்த மாஜினி, 1870-ல் இங்கிலாந்து சென்று அங்கிருந்து சிஸிலிக்குப் புறப்பட்டான். கப்பல் நடுக்கடலிலே போய்க்கொண்டிருக்கின்றது. ஆம், சிஸிலியில் இறங்கிப் பல தலைவர்களைச் சந்தித்துப்பேச வெகு ஆசையோடு போய்க்கொண்டிருக்கின்றான். ஆனால், நடுக்கடலிலேயே கைதுசெய்யப்பட்டான். காரணம் காட்டப்படவில்லை. காருண்ய மிகுந்த சர்க்கார்கள் என்று பெருமையடித்துக்கொள்ளுகிற எந்த சர்க்கார்தான், மனிதன் உரிமையைப் பறிக்கத் தகுந்தகாரணம சொல்லுகிறது? இந்தக் காலத்தில், இவ்வளவு நாகரிக சர்க்காரிலேயே இந்த முற்போக்குப் பாதையே காணமுடியவில்லையே. அன்றந்த அயல்நாட்டாட்சியில் அந்த உரிமையின் அழகு எப்படி வடிந்து கொட்டிருக்கும்? ஆகையால், காரணங்காட்டாமலே கைது செய்யப்பட்டு, கெய்டாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கே இரண்டு திங்கள் சிறையிலடைக்கப்பட்டான்.

அவனைக் கைது செய்வதற்குக் காரணம் என்னவென்றால், இவனைச் சிறைச்சாலையில் அடைத்து வைப்பதின்மூலம், அரசாங்கத்துக்கு எதிராக நடந்துகொண்டிருந்த புரட்சி நடவடிக்கையை ஸ்தம்பிக்கச் செய்யலாம் என்பதுதான். அவன் சிறைச்சாலையிலிருந்து வெளியே வருவதற்குள்ளாக ஆதரிப்பவர்களும், எதிர்ப்பவர்களும் சமத்

தொகையினராகிவிட்டனர். அதனால், யார் மெஜாரட்டிக் கட்சியினர், யார் மைனாரட்டிக் கட்சியினர் என்று அறுதியிட்டுச் சொல்லமுடியாத அளவுக்கு இரண்டு கட்சிகளும், அதாவது சர்க்காரை ஆதரிக்கும் கட்சி, எதிர்க்கும் கட்சி ஆகியவைகள் இரண்டு திங்களில் ஓங்கி வளர்ந்துவிட்டன. மக்கள் மனப் பெருக்கத்தை மாளிகையின் பணப்பெருக்கம் தடுத்துவிட்டது. மாஜினியின் நேரடியான பார்வையில் கிறுகிறுவென வளர்ந்த இயக்கம் விடுதலையாய் வெளியே வருவதற்குள் சர்க்கார் கட்சி வளர்ந்துவிட்டது. அந்தச் சூழ்நிலையையுண்டாக்கி விட்டார்கள் சூதகர்களும், முடிதாங்கிகளின் தாள் தாங்கிகளும்.

வெளியே வந்த மாஜினி இந்த நிலையைக் கண்டு கண் கலங்கினான். எனினும் அவன் முயற்சியில் தளரவில்லை. படமெடுத்தாடிய பாமரமக்களைத் தன் மகுடியால் ஒன்று சேர்த்தான். மீண்டும் ஓர் மாபெரிய பொதுக்கூட்டத்தைக் கூட்டினான்.

“என் குரல் உங்களைச் செயல்புரியக் கூவுகிறது. உங்கள் கைதட்டலின் எதிரொலி கோட்டைச் சுவர்களில் கேட்கிறது. அந்த ஓசை உள்ளே வசிக்கும் உல்லாச புரியினர் காதில் ஒலிக்கிறதோ இல்லையோ, அதைப்பற்றி நானோ அல்லது நீங்களோ கவலைப்படக்கூடாது. நம் நமது நியாயமான பாதையை விட்டு விலகப் போவதில்லை. இதுவரை என்னைப் பின்பற்றினீர்கள். இனியும் அதைச்செய்யத் தயங்கமாட்டீர்கள் என்று திடமாக

நம்புகிறேன். என் மரணதண்டனைக்கு மரண ஓலை படித்த உங்கள் மட்டற்ற உழைப்புக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டிருக்கின்றேன். எனினும் நாம் எடுத்துக்கொண்டிருக்கும் வேலை, ஒருவர்மேல் இருக்கும் ஆசையை, ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளுகிற வெறும் அன்பு மடலாக, சம்பிரதாயச் சடங்காக இருககக் கூடாதென்பதே என் வேண்டுகோள்."

"தீட்டிய வாளுக்கு இரையாகாதிருந்த நம்மில் பலர், மன்னர்கள் தீட்டிய பணத்துக்கு அடிமையாய் விட்டார்கள் என்பதை எண்ணும்போது என் மனம் வேதனையடைகிறது. நான் என் ஒருவனுக்காகவே பாடுபட்டேன் என்று அவர்கள் நினைத்து அவ்வண்ணம் கொள்கையைப் பணத்துக்காக விற்றார்கள் என்ற செய்தியைக் கேட்டபோது, அவர்கள் அறியாமைக்காக இரங்குவது தவிர, ஆத்திரப் பட்டுப் பயனில்லை. நேற்றுவரை நம்மோடு இருந்து தோளோடு தோள் உரசி நின்று பல கஷ்டங்களை அனுபவித்து ஓரளவுக்கு வெற்றி பெறும்போது ஒதுங்கி நிற்பவர்களைப் பற்றியோ பக்தியால் மயங்கிக், கொள்கையை விலைகூறும் குள்ள மனம் படைத்தவர்களைப் பற்றியோ நாம் கவலைப்படக் கூடாது. இலட்சிய வாதிகளை இகழ்ச்சியும் அணுகுவதில்லை. புகழ்ச்சிக்காக அவர்கள் பல் இளிப்பதுமில்லை. ஏற்றத்தாழ்வுகளை எவன் சமமாகக் கருதுகின்றானோ, அவனே பொதுநலத் தொண்டுக்குத் தகுதியுடையவன். ஏனெனில், அவன் திரும்பிய

பக்கமெல்லாம் எதிர்ப்பை அனுபவித்தவன், இடையிலே ஒரு சிறிய சந்தோஷத்துக்காக மயங்கிவிடுவதில்லை.

ஒரு புலி துரத்திக்கொண்டு வர, தப்பித்தோடி ஒரு மரக்கிளையைத் தாவிப்பிடிக்க, அந்த மரக்கிளையை அணில் கடித்துக் கத்தரித்துக்கொண்டிருக்க, அண்ணாந்து பார்க்கும்போது ஒரு துளித் தேன் நாவில் விழுந்தால் அது ஒரு இன்பமாகுமா? அதுபோல், பொதுநலத்தொண்டன் கொள்கை வேகத்தில் ஓடிக்கொண்டிருக்க இடையிலே பல எதிரிகள் எதிர்க்க, அதிகாரிகள் அதட்ட, வேட்டு சத்தமும், தடியடியும், தடையுத்தரவும் பிறக்க, இதற்கிடையிலே தன் கழுத்தில் விழும் மாலைக்காக ஒருவன் மகிழ்ந்துவிட முடியுமா? ஆகவே நாம் விடும் ஒவ்வோர் மூச்சும் கனல் கக்கவேண்டும் என்று கருதிக்கொண்டிருக்கும் நாம், கற்கண்டின் சுவையைப்பற்றிக் கவலைப்படுவானேன், என்ற கருத்தை யறியாதவர்களிடம் நாம் கடுஞ்சொற்களை வீசி, அவர்கள் கவலையை மேலும் மேலும் கிளறி, அவர்கள் நெஞ்சைக் கல்நெஞ்சாக்குவதற்குப் பதில் கருணைகாட்டவேண்டும். கண்ணியமாக நடந்து கொள்ளவேண்டும், கடமையை உணர்த்த வேண்டும். சொல்மாறிக் கிடையே கண்மாரி பொழியுமானால், அதற்காக மனம் மாறிப் போகக் கூடாது என்ற உண்மையைநீங்கள் அனைவரும் மனதில் வைத்துச் செயல்புரிவீர்களாக," என்று அடிக்கடி இத்தாலிய நாட்டை எழுப்பிய வண்ண

மிருந்தான். ஆனால் இவன் செய்த இந்த முயற்சி காலம் கடந்துவிட்டது. அவன் சிறையிலிருந்து வெளியே வருவதற்கு முன்பே, மன்னன் வீசிய மாயவலையில் மக்கள் அகப்பட்டுக்கொண்டனர். அகப்பட்டவர்கள் போக எஞ்சியவர்களைத் தடுக்க முயன்றான். முடியவில்லை. மக்கள் யார்? என்ற விசாரணையிலீடுபட்டான்.

## மக்கள் யார்?

பல்லாண்டுகள் மக்கள் மடமைக்கடலில் மிதந்தவர்கள். அறியாமையால் அற்பப்புகழ்ச்சிக்கு அடிமைப்பட்டவர்கள். தங்கக்கவசத்திற்குள் தரித்திர எண்ணம் மறைந்துகொண்டிருப்பதை அறியாதவர்கள். பணத்தோட்டத்தில் தாம் பிணமாக நேர்ந்தாலும் மனத்தைத் தம்வசப்படுத்தத் தகுதியற்றவர்கள். தரித்திரத்தோணிக்குத் தங்க நங்கூரம் போட்டிருந்தாலும் நங்கூரம் தேவையா? தோணி தேவையா? அதன்மேல் தம் பிரயாணம் அவசியமா? என்பதெல்லாம் தெரியாமல், தங்க நங்கூரம் போட்ட தோணியில் தரித்திரக்கடலில் மூழ்குவதானாலும், விநாடிக்கு எத்தனை மூச்சு என்பதை விரல்விட்டு எண்ணக் கூடியவர்கள். காலையில் வறுமை, மாலையில் பெருமை என்ற குறுகிய காலஅளவோடு தன்கருத்துக்கு வேலியிடுபவர்கள். களிமண்ணைப் போன்றவர்கள். இன்று ஒரு உருவம் செய்யலாம் நாளையே அதை மாற்றி வேறோர் உருவம் செய்துகொள்ளலாம் என்ற மனக்கட்டுப்பாடில்லாதவர்கள். காலத்தாலும் கருத்தாலும் மாறமுடியாதவர்கள். ஏழைகள். எதையும் நம்பும் இயற்கைச் சுபாவமுடையவர்கள். சிந்திக்கத் தெரியாதவர்கள். ஒருவன் கொள்கையைப் பின்

பற்றுவதைக்காட்டிலும், ஒருவன் உருவாக்கும் டம்பத்துக்கும் மயங்கிவிடுபவர்கள். தீயதைத்தீயதால் அளிப்பதா ?– நல்லதால் அழிப்பதா ? என்பதை உணரத் தெரியாதவர்கள். விசைவைத்த பொம்மைகள். புகழைத் தேடிச்செல்பவர்கள். புகழ் இவர்களைத் தேடிவரும் என்பதை அறியாதவர்கள். மானுபி மானம் மனதால் வரவேண்டுமேயன்றி உடையால், அலங்காரத்தால் வருவதில்லை என்ற உண்மையையறியாதவர்கள். கூடிக்கலையும் மேகத்தைப் போன்றவர்கள். தோன்றி மறையும் மின்னலைப் போன்றவர்கள். உழைப்பையும் பிழைப்பையும் ஒன்று சேர்த்துப்பார்க்காமல், உழைப்புத் தன் கடமை. பிழைப்பு ஆண்டவன் கடமை என்று நினைக்கும் பேதைமனத்தினர். சென்றால் அவர்கள் செல்லட்டும். நேற்றுவரை ஒன்றைச்சரி என்று ஒப்புக்கொண்ட மனம், இன்று அது சரியில்லை என்று ஒப்புக்கொள்ளுவதற்குண்டான காரணம் சரியாக நிர்ணயக்கப்படவேண்டும். அது தெரியாதவரை நான் மாறமுடியாது. ஆகவே, இன்று பறக்கும் மன்னன் கொடியின் கீழோ, அல்லது அவனுடன் செல்லுபவர்களில் நான் ஒருவனாகவோ இருக்கப் போவதில்லை. அரசன் என்வைரி. அவன் கொடியின் வாஷநிழலில் நான் அடி எடுத்து வைக்கமாட்டேன். என்ற வேதனைச் சொற்களை வெடிபோல் கிளப்பினான். இவனுடைய களைப்பாத முயற்சியைப்பலர் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டு சோஷலிஸ்டு கொள்கை ஓங்கிவிட்டது – என்றாலும் மன்னராட்சி ஏற்பட்டு விட்டது.

எவ்வளவோ தொண்டர்கள் இப்படித்தான் உழைத்துழைத்து இயக்கம் வலுப்பெற்றவுடன், அந்த இயக்கத்தை அதன் மூலதனத்தை மற்ற

வர்களுக்கு ஒப்படைத்து விட்டு வேதனையோடு வெளியே வருவது வழக்கமாய்விட்டது. இத்தாலிய நாடும் இதற்கு விதிவிலக்கா என்ன? ஆகவே அங்கும் அன்றும் இந்தச் சுயநலப்புலிகள் இருக்கத்தான் செய்தார்கள்.

## முடிவு

கருஞ்சட்டைப் படையை நிறுவி, இத்தாலிய இளைஞர்களின் எண்ணத்தை ஒருமுகப்படுத்தி, செயலுக்குத் தூண்டிய சிந்தனைக் கடல், இத்தாலியைக் காத்த இணையற்ற வீரன் என்று எல்லா நாட்டாராலும் புகழப்பட்டவன் மாஜினி. மாற்றாரின் கொடுமைகளைக் களைந்து, மக்களை மக்களாக வாழவைக்க எண்ணிய மாஜினி, கருஞ்சட்டை வீரன். அவன் தனது கருத்துக்கள் கனிந்து இத்தாலி எழில் முகங்கொள்ளும்வரை கருஞ்சட்டையணியத் துணிந்த கர்மவீரன் அவன். தான் கொண்ட கவலையொழிந்த நன்னாளைக் கண்டபிறகே இறக்க வேண்டுமென்று நினைத்த புரட்சி வேங்கன். 1872-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 10-நாள் பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரச் சரிவின் சமாதியிலே விழிக்காத தூக்கத்திலாழ்ந்துவிட்டான் அவ்வீரன்.

குமுறியெழுந்த விடுதலை வேட்கையான் மாஜினி ஆற்றிய செயல்களும், முழக்கிய பேச்சொலியும், தீட்டிய கருத்துரைகளும், அந்தச் சாய்ந்த கோபுரச் சரிவில் மட்டுமன்று, அடிமைத்தளையை உடைத்தெறியத் துடிக்கும் மக்கள் இதயங்களிலெல்லாம் சங்கநாதம் புரிகின்றன.

வாழ்க மாஜினியின் மாசற்ற தியாகத் தழும்புகள்!

வாழ்க கருஞ்சட்டை !!